Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...

C/348

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®


IATA

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 30 வெள்ளிக்கிழமை (14.01.2011) பக்கங்கள் 12 ஓசை – 106

## "லாநினா" அசாதாரண காலநிலை மாற்றம் அதிகூடிய மழைவீழ்ச்சி இலங்கையில்



### பசுபிக் கடற்பரப்பில் காலநிலை மாற்றத்தின் விளைவு

(கொழும்பு)

தற்போதைய அசாதாரண காலநிலை மாற்றத்துக்கு 'லாநினா' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

மேற்படி 'லாநினா' காலநிலையை இலங்கை எதிர்கொண்டுள்ளதால் 100 வருடங்களுக்குப் பின்னர் அதிகூடிய மழை வீழ்ச்சி இலங்கைக்கு கிட்டியுள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் பி.பி.சமரசிங்க தெரிவித்தார்.

பாரிய வெள்ளப் பெருக்கையும் மண்சரிவையும் ஏற்படுத்தியுள்ள தற்போதைய சீரற்ற காலநிலை மேலும் சில தினங்களுக்கு நீடிக்குமென்றும் எதிர்வரும் பெப்ரவரி மாதமே (11 ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம்

### மானிப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் கிணற்றிலிருந்து நேற்றுக்காலை பெண் ஒருவரின் சடலம் மானிப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த சின்னராசா நாகரத்தினம் (வயது 70) என்ற வயோதிபப் பெண்ணினுடையதே இச்சடலம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. (11 ஆம் பக்கம் பார்க்க)

# அசாதாரண காலநிலை தொடர்ந்தால் நாட்டில் உணவு நெருக்கடி ஏற்படும்!

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை




(கொழும்பு)

**மோசமான காலநிலை மாற்றங்கள் ஆசிய நாடுகளில் தொடர்ந்தும் நிலவிவருவதால் அடுத்து வரும் சில மாதங்களில் இலங்கையில் பாரிய உணவு நெருக்கடி ஒன்று தோன்றும் அபாயம் உள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இந்த உணவு நெருக்கடியை எதிர்கொள்வதற்கு அனைவரும் தயாராகுமாறும் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கிறார்.

ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடனான சந்திப்பு ஒன்று கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இச்சந்திப்பில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையில் தற்போது நிலவிவரும் மோசமான காலநிலை காரணமாக நாட்டின் உணவு (11 ஆம் பக்கம் பார்க்க)



**ஹபரணை பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்குண்டு 3 வயதான யானையொன்று சுமார் 15 அடி உயரமான மரமொன்றில் உயிரிழந்துள்ளது. குறித்த பகுதியில் சுமார் 18 அடி உயரத்துக்கு வெள்ளம் தேங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.**

## யாழில் ஆரம்பிக்கிறது இந்திய வீட்டுத்திட்டம் பொறியியலாளர் குழு இன்று வருகிறது

(கிளிநொச்சி)

யுத்தப் பாதிப்புக்குள்ளான வடக்குப் பகுதியில் இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள வீடுகளின் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதற்காக இந்தியாவிலிருந்து 4 பேர் அடங்கிய கட்டடப் பொறியியலாளர் குழு இன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளது.

வடபகுதியில் இந்திய குடியிருப்புக்களை அமைப்பது தொடர்பாக நேற்று கிளிநொச்சிப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட குழு கிளிநொச்சி அரச அதிபருடன் இவ்விடயம் தொடர்பாக விசேட மாநாடு ஒன்றை நடத்தியிருந்தது.

கிளிநொச்சிப் பகுதியில் முதற்கட்ட ஆய்வுகளை மேற்கொண்ட இந்திய பொறியியலாளர் குழு அங்கு முழுமையாக சேதமடைந்த (11 ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்திலிருந்து கடற்படை வாபஸ்; இராணுவம் அப்பகுதிகளை கையேற்கும்

(யாழ்ப்பாணம்)

தீவகத்தின் பல பகுதிகளிலும் நிலைகொண்டிருக்கும் கடற்படையினர் மிக விரைவில் அப்பகுதிகளிலிருந்து வெளியேறி முகாம்களுக்குள் தங்கிக்கொள்ளவுள்ளனர். தீவகத்தில் இதுவரை கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த 4 தீவுகள் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் உபய மெதவெல தெரிவித்தார்.

முதற்கட்டமாக ஊர்காவற்துறை, புங்குடுதீவு, மண்டைதீவு, காரைநகர் ஆகிய தீவகப்பகுதிகளே இவ்வாறு இராணுவத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தரைவழிப்பாதை தொடரபில்லாததால், நெடுந்தீவு தொடர்ந்தும் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பாகிஸ்தானின் இராணுவத்தளபதி அடுத்த வாரம் கொழும்பு விஜயம்



(கொழும்பு)

பாகிஸ்தான் இராணுவத் தளபதி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அடுத்த வாரம் கொழும்புக்கு வரவிருக்கிறார்.

இலங்கை அரசு விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்ட பாகிஸ்தான் அரசு தனது நாட்டின் இராணுவத் தளபதியை எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்புக்கு அனுப்பிவைக்கவுள்ளது.

பாகிஸ்தானின் இராணுவத் தளபதியான ஜெனரல் அஸ்பாஹ் பர்விஸ் கயானி கொழும்பில் 3 தினங்கள் தங்கியிருந்து மிக முக்கிய பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார். (11 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்றம் அரசியல் யாப்பு அனுமதிக்குமா?

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்

(கொழும்பு)

இராணுவ நீதிமன்றம் என்பது அரசியல் அமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டதா இல்லையா என்பது குறித்த நீதிமன்றத் தீர்ப்பு எதிர்வரும் 25 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

குறித்த வழக்கு தொடர்பிலான தீர்ப்பு உயர்நீதிமன்றிற்கு தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 25 ஆம் திகதி உயர் நீதிமன்ற நீதிபதி ரஞ்சித் டி சில்வா உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு முன்னிலையில் தீர்ப்பு அறிவிக்கப்படவுள்ளது.

குறித்த தினத்திற்கு வழக்கு சார்ந்தவர்களை நீதிமன்றில் ஆஜராகுமாறு அவர்களுக்கு முன்னறிவித்தல் கடிதம் விடுக்கப்பட்டுள்ளது.

இராணுவ நீதிமன்றம் அரசியல் அமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டதா இல்லையா என்பது குறித்த மனு மீதான விசாரணை பிரதம நீதியரசர் அசோக டி சில்வா உள்ளிட்ட 5 நீதியரசர்கள் கொண்ட குழு முன்னிலையில் (11 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளசின் தீவிர முயற்சி

# 16 வருடங்களின் பின் கிழக்கு அரியாலை பூம்புகார் பகுதி மக்கள் சொந்த இடத்தில்!



(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மேற்கொண்ட தீவிர முயற்சியின் பயனாக 16 வருடங்களின் பின்னர் கிழக்கு அரியாலையின் பூம்புகார் பகுதி மக்களின் மீள்குடியமர்வுக்காகத் தயார் செய்யப்பட்டு வருகிறது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அப்பகுதியிலிருந்து மக்கள் 1995ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வந்தனர்.

தற்போதுள்ள அமைதிச் சூழலில் அந்த மக்கள் அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து அமைச்சர் மேற்கொண்ட தீவிர முயற்சியின் பயனாக மீண்டும் அப்பகுதியில் மீள்குடியேற்றம் நடைபெறவுள்ளது.

இதுதொடர்பான நிகழ்வு நேற்று பூம்புகார் பகுதியில் இடம்பெற்றபோது, அங்கு உரையாற்றிய அமைச்சர் அவர்கள் - கிடைக்கின்ற வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் இது ஒரு ஆரம்பக் கட்ட நடவடிக்கையே என்றும், எதிர்வரும் காலங்களில் அப்பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தப்படுமென்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மக்களின் வாழ்வாதாரத்தை மேலும் வலுப்படுத்தவும், ஒளியூட்டவுமே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் இரண்டு நாள் பயணமாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளதாகவும், இது களியாட்டத்திற்கான விழா அல்லவென்றும், மக்களது தேவைகளையும், கோரிக்கைகளையும் ஜனாதிபதியிடம் தெரியப்படுத்துவதுடன், மக்களுக்கு அரசின்மீது நம்பிக்கையூட்டக்கூடிய வகையிலான நிகழ்வாகவுமே சூரியப் பொங்கல் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், மக்களது மீள்குடியேற்றத்திற்கு உகந்த வகையில் ஒத்துழைப்பு வழங்கிய ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலென்டின் (உதயன்),



யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, கேணல் திஸ்ஸ நாயக்க மற்றும் யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, நல்லூர் பிரதேச செயலர் செந்தில் நந்தனன், நல்லூர் பிரதேச சபை செயலாளர் எம்.ஜே.சாந்தசீலன் உள்ளிட்டோருக்கு அமைச்சர் அவர்கள் தனது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில், ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளர் ரவீந்திரன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மாணிக்கராஜா ஆகியோரும் உடனிருந்தனர்.

## போக்குவரத்து கண்காணிப்பு யாழில் அதிகமாகிறது!

(அச்சுவேலி)

யாழ்.குடாநாட்டு வீதிகளில், வீதிப்போக்குவரத்துக் கண்காணிப்பு பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்திருப்பதை பரவலாகக் காணக்கூடியதாக உள்ளது.

வீதிகளில் திடீர் திடீர் எனச் சடுதியாகத் தோன்றி பரிசோதனைகளில் ஈடுபடும் பொலிஸார் வாகனச்சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை அதிகூடிய கவனம் செலுத்திப் பரிசோதித்து வருவதனையும், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதவர்கள் மற்றும் காலாவதியான காப்புறுதிப் பத்திரங்கள் வைத்திருப்போர் மீது குற்றப்பணம் அறவிடுவதுடன், வழக்குப் பதிவுகளையும் மேற்கொண்டு வருவதுடன், இம்மாத இறுதிக்குள் வாகன வரிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளுமாறும், வாகன உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தி வருவதையும் காணக்கூடியதாக உள்ளது. (03)

## பொங்கல் உற்சவம்

(அச்சுவேலி)

அச்சுவேலி நாவலம்பதி அருள்மிகு காட்டுமலைக் கந்தசுவாமி கோயிலின் தைப்பொங்கல் பூசை வழிபாடுகள் நாளை காலை 5.00 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இதில், விசேட பூசை வழிபாடுகளுடன், அர்ச்சனைகளும் இடம்பெற இருப்பதுடன், பக்தர்களின் ஈடேற்ற வாழ்வுக்காகச் சிறப்புப் பிரார்த்தனைகளும் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சரித்திரப் பிரசித்திபெற்ற மேற்படி ஆலயத்தின் இப்பொங்கல் உற்சவத்தில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் கலந்துகொள்வது வழக்கமாகும். (03)

## யாழ்.நகரில் கட்டாக்காலிகள்

(கொக்குவில்)

யாழ்.நகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் காலை போக்குவரத்து அதிகரித்து இருக்கும் சமயங்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு கட்டவிழ்த்து விடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், போக்குவரத்தில் வீதிகள் பெருமளவு பழுதடைந்து உள்ளதாலும், விபத்துக்கள் ஏற்பட்டு மரண அச்சுறுத்தல் நிகழ ஏதுவாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

கட்டாக்காலிகளை வீதிகளில் கண்டால் உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு, கால்நடை வளர்ப்போர் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென பாதசாரிகள் முதற்கொண்டு வாகனாதிகள் வரையானோர் வேண்டுகோள் விடுகின்றனர். (68)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### கலைப்பீடம்

### புதிய கல்வியாண்டு 2009/2010 க்கான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்

கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம் மற்றும் சட்டத்துறை அனைத்து வருட மாணவர்களுக்குமான புதிய கல்வியாண்டு 2009/2010 இற்கான விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 01.02.2011 ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்றன. மாணவர்கள் அனைவரும் இவ்வறிவித்தலைக் கவனத்திற் கொள்ளவும்.

தற்போதைய இயற்கை அனர்த்தத்தின் காரணமாக முன்னர் அறிவிக்கப்பட்டவாறு 17.01.2011ஆம் திகதியன்று விரிவுரைகள் ஆரம்பிக்கப்படமாட்டா. அத்துடன், முதலாம் வருட மாணவர்களுக்கான துணைப்பாட அலகுகளுக்கான பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளன.

பதிவாளர்.
13.01.2011. (C/390)


## காரைநகரில் கலாசார மண்டபம்


(யாழ்.நிருபர்)

காரைநகரில் புதிய கலாசார மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு பத்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காரைநகரைச் சேர்ந்த யாழ். வர்த்தகர்கள் இணைந்து நான்கு இலட்சம் ரூபா நிதி சேகரித்துப் புதிய காணி ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளனர்.

நான்கு பரப்பு விஸ்தீரணமுள்ள இந்தக் காணியில் கலாசார மண்டபம் அமைக்கலாம் எனவும், காரைநகர் அபிவிருத்திச் சபை ஊடாக உதவி அரசாங்க அதிபரிடம் இக்காணியின் ஆவணங்கள் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளன. (10)

## உரும்பிராய் கிணற்றில் மீட்கப்பட்ட சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது!



(யாழ்ப்பாணம்)

யாழ். உரும்பிராய் யோகபுரம் பகுதியில் நேற்று முன்தினம் கிணறொன்றில் இருந்து மீட்கப்பட்ட ஆணின் சடலம் நேற்றுக் காலை அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்ட, வன்னியிலிருந்து வந்திருந்த 5 பிள்ளைகளின் தந்தையான மகாலிங்கம் அமர்தராஜா என்பவரின் சடலமே இதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது.

கிணறு நேற்றுத் துப்புரவாக்கப்பட்டபோது, கிணற்றின் அடியில் காணப்பட்ட அவரது கைத்தொலைபேசி, பாதணி மற்றும் கடைசியாக அணிந்திருந்த சாரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

யாழ். நீதிவான் பிறப்பித்த உத்தரவின் பிரகாரம் நேற்றுக் காலை கோப்பாய் பொலிஸார் அந்தக் கிணற்றை துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டனர். இந்த நிலையிலேயே, கிணற்றின் அடியில் இருந்து கைத்தொலைபேசி, பாதணி மற்றும் அவரது சாரம் என்பவற்றினைக் கொண்டு அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## நிவாரணப் பொருட்கள் யாழில் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் அனர்த்தங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையில் நிவாரணப் பொருட்களை அனுப்புவதற்கு ஆவன செய்யப்படுகின்றது.

மேலதிகமாக மக்களிடமிருந்தும் நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொண்டு செல்ல முடியுமாதலால் எமது காரியாலயத்தில் (இல. 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்) தொடர்பு கொண்டு நிவாரண உதவிகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். (தொலைபேசி 021 222 2561, 021 321 5555) பொருட்கள் அல்லது பணத்திற்கான பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

## கல்வியியற் கல்லூரிகளின் பரீட்சைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

கல்வியியற் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்களுக்கான பரீட்சைகள் திகதி வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைகள் எதிர்வரும் 18ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போது காணப்படுகின்ற காலநிலை சீரின்மை காரணமாக இந்தப் பரீட்சைகளை காலவரையறை இன்றி ஒத்திவைப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தப் பரீட்சைகளை நடத்தும் திகதி குறித்து, பின்னர் அறிவிக்கப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

## சிறுவர்களுக்கு சமாதானக் கல்வி

யாழ். சமாதானத்திற்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த சிறுவர்களுக்கான சமாதானக் கல்வி செயற்பாடு இவ்வருடத்திலும் முன்னெடுக்கப்படவிருப்பதாக நிகழ்ச்சித்திட்ட அமைப்பாளர் செல்வி.சோபனா யோகலிங்கம் தெரிவித்தார். அந்தவகையில், எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை கோப் பாய் தெற்கு, கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலையில் நண்பகல் 12.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை சிறுவர்களுக்கான சமாதானக் கல்விச் செயற்பாடு மேற்கொள்ளப்படவுள்ளது.

முதல் நிகழ்வாக நேற்று வியாழக்கிழமை யாழ். நல்லூர் தெற்கு, ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் மேற்படி செயற்பாடுகள் ஆரம்பமானதும் குறிப்பிடத்தக்கது. (68)

## குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த விழிப்புக் குழுக்கள் அமைப்பு!

(யாழ்ப்பாணம்)

குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை கைது செய்வதற்காக மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி மல்கம் பிளேட்டினது ஆலோசனைக்கு அமைவாக, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், ஆனைக்கோட்டை பகுதிகளில் விழிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஆகியோருடன் பொலிஸாரும் இணைந்து இரவு வேளைகளில் அப்பகுதிகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் நள்ளிரவு 10.00 மணிக்குப் பின் வீதிகளில் அநாவசியமாக நடமாடும் நபர்களை விசாரணை செய்து வருகின்றனர். தகுந்த காரணமின்றி நடமாடுபவர்களை மேலதிக விசாரணைக்காகப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை செய்கின்றனர். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மக்களிடம் கேட்டுள்ளார்.(54)

## திடீர் மின்வெட்டு; பாவனையாளர் சிரமம்

(வடமராட்சி)

வடமராட்சியில் சுமார் 6 மணித்தியாலங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி தொடர்ச்சியாக மின்சாரம் தடைப்பட்டதால் மின் பாவனையாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று வியாழக்கிழமை அதிகாலை 4 மணியிலிருந்து பகல் 10.45 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருந்தது. இதனால், அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட்டதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (100)

உண்மையை அடிப்படையாகக் கொண்டுதான் சமுதாயங்களை உருவாக்க வேண்டும். சமுதாயத்திற்கு ஏற்றாற்போல் உண்மைதனை மாற்றி அமைத்துக்கொள்ளக் கூடாது.

-விவேகானந்தர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## உதவிக்கரம் நீட்டுங்கள்

"வெள்ளம் வருமுன் அணை கட்டப்பட வேண்டும்" என்று கூறுவார்கள். எதிர்பாராமல் திடீரென ஏற்படும் வெள்ளப்பெருக்குக்கு யாரால் அணைகட்ட முடியும்?

நல்லதும், கெட்டதும் அவரவர் தலைவிதிப்படி நடக்கும் என்பார்கள். ஆனால், கிழக்கு மாகாணம் உள்ளிட்ட நாட்டின்பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த மக்களின் தலைவிதியை சீரற்ற கால நிலையின் கோரத்தாண்டவம் ஒன்றாக மாற்றி விட்டது. அந்த மக்கள் என்னதான் பாவம் செய்தார்களோ தெரியாது?

பாவ புண்ணியங்களை ஒருபுறம் தள்ளிவைத்துவிட்டு, பாதிப்புக்குள்ளானவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு மட்டும்தான் உரித்தானதல்ல. எம் ஒவ்வொருவருக்கும் அப்பொறுப்பு உண்டு என்பதை நாம் மறந்து விடலாகாது.

வெள்ளப்பாதிப்புக்குள்ளான மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பொலநறுவை மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை ஏழரை லட்சத்தில் இருந்து பத்துலட்சத்தையும் தாண்டியுள்ளதாக அறிய முடிகிறது.

அங்கு இதுவரை இயங்கிவந்த 97 நலன்புரி நிலையங்கள் தற்போது 507 நலன்புரி நிலையங்களாகவும் உயர்ந்துவிட்டன. வளிமண்டலத் திணைக்கள அறிவித்தலின்படி பெப்ரவரி மாதம் வரை நீடிக்கவுள்ள இக்கால நிலை, நிராதரவான நிலையில் இருக்கும் இம் மக்களை மேலும் நிர்க்கதிக்கு உள்ளாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களின் துயர்தனை துடைப்பதற்கு சுற்றிக்கைகளின் வரப்புக்குள் கட்டுப்பட்டு நிற்காது, திடீர் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இம்மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான நிவாரண உதவிகளைச் செய்வதற்கும், வெள்ளத்தில் தத்தளிக்கும் மக்களை மீட்கும் பணிகளை மேற்கொள்வதற்கும் ஐக்கிய நாடுகள் சபை முன்வந்து இதற்கான ஏற்பாடுகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேபோல், எமது அண்டைநாடான இந்தியாவும், அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் உடனடித்தேவைக்குரிய பொருட்களை விமான மூலம் அனுப்பியுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்காக யாழ்.பல்கலைக்கழகமாணவர்கள் உலர் உணவுப்பொருட்களைச்சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதும், பொதுமக்களை தங்களாலான உதவிகளையும், உலர் உணவுப் பொருட்களையும் தந்துதவும்படி கேட்டிருப்பதும் வரவேற்க்த்தக்க விடயம் மட்டுமல்லாது, வெள்ளத்தால் அல்லலுற்றிருக்கும் மக்களுக்கு சற்று ஆறுதல் அளிப்பதாகவும் உள்ளது.

வெறுங்கையோடு உடுத்த உடுப்புகளுடன் கொட்டும் மழையிலும், குவிந்தோடும் வெள்ளத்தினூடாகவும் வெளியேறிய மக்களுக்கு உதவுவதற்கு புலம்பெயர் வாழ்மக்களும் மற்றும் கருணை உள்ளம் கொண்ட மக்களும் இந்நாளில் முன்வர வேண்டுமென வலியுறுத்திக்கேட்டுக்கொள்கிறோம்.

-ஆசிரியர் -

# இந்திய இழுவைப்படகுகளில் அத்துமீறல் தொடர்கின்றது

யாழ். கடல் நீரேரியிலும் தீவகக் கடற்பரப்பிலும் இந்திய இழுவைப் படகுகளின் தொழில் நடவடிக்கைகளும் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதும் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் தலைவர் தவரட்ணம் தெரிவித்தார்.

இந்த மீன்பிடி நடவடிக்கைகள் குறித்துள்ள தை மாதம் முதலாம் திகதியில் இருந்து அவற்றிற்கான தடை கடுமையாக அமுல்படுத்தப்படுமென யாழ்.மாவட்ட கடற்தொழில நீரியல் வளத்திணைக்களம் தெரிவித்திருந்தது. இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழையும் இந்திய இழுவைப்படகுகள் யாழ் மண்டைதீவுக் கடற்பரப்புவரையும் ஏனைய தீவுப்பகுதிக் கடற்பரப்புக்களிலும் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் மீனவர்களின் பெறுமதியான மீன்பிடி வலைகளையும் சேதப்படுத்தியும் வருகின்றன. அத்துடன் இவ்வாறான தொழில் நடவடிக்கைகளினால் கடல் வளமும் அழிக்கப்படுகின்றது.

அத்துடன் எமது பகுதி மீனவர்களும் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தியும் மீன்பிடியில் ஈடுபடுவதும் தொடர்ந்த வண்ணம் உள்ளது எனவும் தெரி வித்த அவர் சம்பந்தப்பட்டவர்கள் இவை குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் கேடடுக்கொண்டுள்ளார். (பா)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 18 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

அனர்த்த இடர்முகாமைத்துவ அமைச்சு வவுனியா மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு 18 மில்லியன் ரூபா நிதியை வழங்கியுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம்.எஸ்.சாள்ஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

வவுனியா அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நேற்று வெளியிடப்பட்ட இறுதித் தகவலின்படி 11 ஆயிரத்து 291 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 582 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள 26 சிறுகுளங்கள் பெரியளவில் சேதமடைந்துள்ளது. அத்துடன் 56 கிலோமீற்றர் நீளமான வீதியும் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது வெள்ளத்தினால் அடித்துச்செல்லப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவது தொடர்பாக உயர் அதிகாரிகளுடனான உயர்மட்ட மாநாடு இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் வவுனியா மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வவுனியா மாவட்டத்திலுள்ள் சகல பிரதேச செயலகர்கள், சமூக அலுவலர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவித்தார். (39)

(முன்னர் வந்த செய்தி 4ஆம் பக்கத்தில்)

# உவர்நீர் உட்புகாதவாறு வேணான் அணைக்கட்டு திருத்தம்

(யாழ். நிருபர்)

காரைநகர் வேணன் அணைக்கட்டின் திருத்த வேலைகள் இவ்வாண்டு ஆரம்பிக்கப்படவுள்ளன. காரைநகருக்குள் உவர் நீர் உட்புகாதவாறும், மழை நீர் கிராமத்தில் தேங்கி நிற்க ஏதுவாகவும் இந்த அணைக்கட்டு அமைக்கப்பட்டிருந்தது.

காரைநகர் கிழக்கு கடல் எல்லையில் அமைக்கப்பட்டிருந்த ஐந்தரைக்கிலோ மீற்றர் நீளமான அணைக்கட்டு கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படாது கடற்படையினரின் காவலரண்கள் அமைக்கப்பட்டிருந்தன.

ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் 14 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வேணன் அணைக்கட்டின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தின் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (10)

# பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் சுகாதாரம் குறித்த கலந்துரையாடல்

(வடமராட்சி)

அதிகரித்து வரும் நோய்த்தாக்கங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் சுகாதாரம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று வியாழக்கிமை காலை 9.00 மணிளவில் பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

பருத்தித்துறை சிறுவர் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரம் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் வடமராட்சிப் பகுதிக்கான சுகாதார சுத்திகரிப்பு சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுகாதார பரிசோதகர்கள்,உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (100)

## தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியுடைய

# அரச உத்தியோகத்தர்கள் விபரங்கள் தேர்தல் அலுவலகத்தில் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் தபால் மூலமாக வாக்களிக்கத் தகுதியுடைய உத்தியோகத்தர்களின் அனைத்து உள்ளூராட்சி சபைப் புத்தகங்களும் யாழ்.செயலகத் தேர்தல்கள் அலுவலகத்தினால் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இப்புத்தகங்கள் விதிகளின் படி, கடந்த 06 ஆம் திகதி அன்று பார்வைக்கு வைக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்தும் கடந்த 10 ஆம் திகதி முதலே இவை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும், இவை தவிர பிரதேச செயலக பிரிவுகள், தபாலகம், பிரதேசசபை ஆகியவற்றிலும் அந்தந்தப் பகுதிகளுக்கான புத்தகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் " இவற்றைப் பார்வையிட்டுத் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்கள் தபால் மூலமாகத் தமது வாக்குகளை விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இவ் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் நிமித்தம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வாக்காளர் கணக்கெடுப்பு எதிர்வரும் மூன்று மாதங்களுக்குப் பிற்போடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேசசபைகளுக்குமான கட்டுப்பணம் கிளிநொச்சி செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், யாழ்.மாவட்டத்தின் ஏனையவற்றிற்கான கட்டுப்பணம் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையும் சுயேட்சைக் குழுக்கள் 06 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையும் தமது கட்டுப் பணத்தைச் செலுத்தலாம் எனவும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். (பா)

# இன்று செயற்படும்

(வடமராட்சி)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வங்கிகள் இன்று வெள்ளிக்கிழமை மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சேவையினை வழங்கவுள்ளதாக வங்கிவட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இதனடிப்படையில் இலங்கை வங்கி 10.30 மணி வரைக்கும், தேசிய சேமிப்பு வங்கி 11.00 மணி வரைக்கும் மக்கள்வங்கி 10.00 மணி வரைக்கும் செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

# மக்களுக்கும் பொலிசாருக்குமான இடைவெளி குறைக்கப்படவேண்டும்

## சுன்னாகம் பொறுப்பதிகாரி தெரிவிப்பு



(சண்டிலிப்பாய்)

கடந்தகாலங்களில் மக்களுக்கும் பொலிசாருக்கும் இடையே மிக நீண்ட இடைவெளி இருந்திருக்கலாம். ஆனால் இனி அப்படி இருக்க கூடாது எனத் தெரிவித்தார் சுன்னாகம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி சிந்தகபண்டார.

வாழ்வகத்தின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

காவல்துறையினராகிய நாம் பொதுமக்களாகிய உங்கள் வரிப்பணத்திலிருந்தே ஊதியம் பெறுகின்றோம். நாம் உங்கள் சேவகர்கள். மக்களுக்குச் சேவையாற்றுவதே எமது நோக்கம்.

மக்கள் பொலிசாருடன் மிக நெருக்கமான உறவை வளர்த்துக கொள்ளவேண்டும். எமக்கு ஆலோசனைகள் கூற வேண்டும். அப்போது தான் நாம் அவர்களுக்குப் பூரணமான சேவையை வழங்கமுடியும் மக்கள் தமது பிரச்சினைகள் தேவைகளை எமக்குத் தெரியப்படுத்தவேண்டும். நாம் மாற்றுவலுவுள்ளவர்கள்,முதியவாகள, விசேடதேவையுடையோருக்கு பெரிதும் சிரத்தையுடன் உதவி செய்துவருகிறோம். இவர்களுக்கு உதவுவது எமது தார்மீக பொறுப்பும் கடமையும் ஆகும் என அவர்மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் பொலிஸ் பொறுப்பதிகாரியின் சேவையைப் பாராட்டி வாழ்வகத் தலைவரால் நினைவுக்கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (54)

# நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

(நல்லூர்)

நலிவுற்ற மாணவர்களின்,கல்வி வளர்ச்சிக்காக யாழ்.எயிட் நிறுவனம் முன்னெடுத்துவரும் செயற்திட்டத்திற்கு அமைவாக,வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட 50 பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான காலணிகளும்,கற்றல் உபகரணங்களும் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ஏ.இராஜேந்திரன் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மத்தியவங்கியின் வடவலய முகாமையாளர் எல்.ஶ்ரீதரன் பிரதமவிருந்தினராகவும், சிறப்புவிருந்தினர்களாக திருமதி பி.அபிராமி,வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்,தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.கைலைநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மன்னார், முல்லை மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விபரம்

(மன்னாா)

மன்னார்,முல்லைத்தீவு மாவட்டங்களில் பெய்த மழை காரணமாக சேதமடைந்துள்ள வீடுகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வெளியிட்டுள்ளார்.

முல்லைத்தீவவு மாவட்டத்தில் 457 வீடுகள் சேதமடைந்துள்ளன. 5 ஆயிரத்து 224 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 991 பேர் பாதிப்படைந்துள்ளனர். ஆயிரத்து 975 குடும்பங்களைச் சேர்ந்த ஆறாயிரத்து 796 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 02 வீடுகளும் முசலி பிரதேச செயலாளர் பிரிவில்களில் 101 வீடுகளும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 40 வீடுகளும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை,மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 344 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 692 பேரும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 471 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 798 பேரும் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 783 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 975 பேரும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில்



2 ஆயிரத்து 15 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 679 பேரும் மடு உதவி அரச அதிபர் பிரிவில் 2 ஆயிரத்து 78 குடும்பங்களைச் சேர்ந்த 7ஆயிரத்து 846 பேர் வரையில் இடம் பெயர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# சுயதொழில் முயற்சிக்கு 200 பேர் தெரிவாகினர்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வன்செயலினால் பாதிக்கப்பட்ட 200 பேருக்கு முதல் கட்டமாக சுயதொழில் மற்றும் வீடு கட்டுவதற்குரிய கடன் உதவிகளை புனர்வாழ்வு அதிகாரசபை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

பயனாளிகளைத் தெரிவு செய்யும் வைபவம் நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றதாக புனர்வாழ்வு அதிகாரசபையின் வடமாகாண அலுவலகம் தெரிவித்தது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் இலங்கை வங்கியூடாக இரண்டரை இலட்சம் ரூபாய் வரை கடன் பெறலாம். அதேவேளை கடந்த காலவன்செயலினால் பாதிக்கப்பட்ட 16 பேருக்கு 'வீட்டு பாதிப்புக்குரிய நஷ்டஈடும் உயிரிழப்பு ஏற்பட்ட இருவருக்கு நஷ்டஈட்டுத் தொகையும் காசோலைகளாக நேற்றைய தினம் வழங்கப்பட்டதாகவும் புனர்வாழ்வு அதிகாரசபையின் வடமாகாண அலுவலகம் குறிப்பிட்டது.

## மீன்விலை அதிகரிப்பு

(தும்பளை)

தற்போதைய அசாதாரண காலநிலையை அடுத்து பருத்தித்துறை சந்தைப் பகுதியில் மீனின்விலை பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் மீனுக்குப் பதிலாக மக்கள் இறைச்சிக் கோழி, முட்டை என்பவற்றை வாங்கிச் செல்கின்றனர். முட்டை ஒன்று 20 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (52)



யாழ்-பிரதேச செயலக கலைவிழாவில் மேடையேற்றப்பட்ட "பண்டார வன்னியன்" நாட்டுக் கூத்தில் இருந்து ஒரு காட்சியைக் காணலாம். (68)

# தொடரும் மழை காரணமாக வவுனியாவில் 11,141பேர் பாதிப்பு

(வவுனியா)

கடந்த ஒரு வாரகாலத்திற்கு மேலாகப் பெய்த கடும் மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் 11,141 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 69 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் தெரிவித்தார்.

5509 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் பயிர்ச்செய்கை 8825 ஏக்கர் .பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. நெடுங்கேணி பிரிவிலேயே அதிகளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வவுனியாவிலிருந்து செட்டிகுளத்திற்கான வீதி தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளதால் செட்டிகுளம் மெனிக்பாம் நிவாரண கிராமத்திற்கு பயணிகளை ஏற்றும் பஸ்கள் மன்னார் வீதி, பம்பைமடு - ஆலங்குளம், மதவாச்சி வீதி வழியாகவே செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

# பாதசாரிக் கடவையான மஞ்சள் கோடுகள் அழிவு

(சண்டிலிப்பாய்)

அண்மைக்காலமாக வீதிகள் மிகவும் சேதமடைந்து காணப்படுவதால் வீதிகளில் உள்ள பாதசாரிகள் கடவையான மஞ்சள் கோடுகள் அழிந்துள்ளன.

வீதிகளில் பாடசாலைகள் வைத்தியசாலை மற்றும் சந்தை, அரச அலுவலகங்களின் முன்பாக பாதசாரிகள் வீதியைக் கடப்பதற்காக மஞ்சள் கோடுகளால் அடையாளப்படுத்தப்பட்டன. அவை வீதிகள் சேதமடைந்துள்ளதால் அழிந்துள்ளன. இதனால் பாதசாரிகள் வீதிக்கடவை தெரியாது வீதியைக கடப்பதில் பெரும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர்.

முன்னர் வீதிக்கடவை இருந்த இடங்களில் வீதியைக் கடக்கும் போது பாதசாரிகள் வாகன சாரதிகளுடன் முரண்படுவதையும் காணமுடிகிறது. (54)

# டெங்கைக் கட்டுப்படுத்த புகையூட்டல் நடவடிக்கை

(தெல்லிப்பழை)

யாழ்.மாநகர சபையின் சுகாதாரத்திணைக்களத்தின் அனுசரணையுடன் குருநகர் பகுதியில் டெங்கு ஒழிப்பு புகையூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.


இப்பகுதி அதிக குடிசன நெருக்கமான பகுதியாகவும், வடிகால்கள் 'அதிகமாக உள்ள பகுதியாகவும் உள்ளது. இப்பகுதியிலிருந்து கடந்த காலங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர்.



அண்மையில் பெய்துள்ள அடைமழையினால் இப்பகுதியில் டெங்கு நுளம்பு உருவாகலாம் என்ற காரணத்தாலும் தற்போதுள்ள நுளம்புகளை அழிக்கவும் குருநகர் பகுதி முழுவதும் தொடர்ச்சியாக கடந்த சில நாட்களாக புகையூட்டப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் உள்ள வீடுகள பொது இடங்கள், வீதிகள் என அனைத்து இடங்களிலும் இப் புகையூட்டப்படுகிறது. மலேரியா எதிர்ப்பு இயக்கப் பணியாளர்கள உட்பட 8 பணியாளர்கள் இயந்திரமூலம் இப்பகுதியில் புகையூட்டிவருகின்றனர். (54)

# தேசிய மட்டத்தில் முதலிடம்



(தெல்லிப்பழை)

வவுனிக்குளம் மு/பாலிநகர் மகா வித்தியாலய ஆசிரியர் வ.வசந்தகுமார் அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் (2010) தேசிய மட்டத்தில் சிறுகதை ஆக்கத்தில் முதலாம் இடத்தையும் கவிதை ஆக்கத்தில் 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டார். கலாசார மற்றும் கலை அலுவலர்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட இந்தப் போட்டிக்கான பரிசளிப்பு 23.12.2011. அன்று கொழும்பு தேசிய நூதனசாலை கேட்போர் கூடத்தில் நடத் தப்பட்டபோது கலாசார மற்றும் கனியவள அலுவல்கள் அமைச்சர் டீ.பீ.ஏக்கநாயக்க இப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். வ.வசந்தகுமார். கடந்த வருடம் நடைபெற்ற சிறுகதைப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (44)

# மதிய உணவிற்கான புதிய அளவுத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்காக வழங்கப்படும் மதிய உணவிற்கான புதிய அளவுத்திட்டம் வருமாறு: மாணவர் ஒருவருக்கு, அரிசி 80 கிராம், பருப்பு 25 கிராம், எண்ணெய் 15 கிராம், உதவிப் பணியாளருக்கு அரிசி 2.5 கிலோகிராம் பருப்பு 300 கிராம், சீனி 150 கிராம்.

யாழ். வலயப் பாடசாலை அதிபர்கள் அனைவரும், இதனடிப்படையில் மதிய உணவுத் திட்டத்தை பாடசாலைகளில் அமுல்படுத்த வேண்டுமென வலயக்கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# முல்லை மாவட்ட கல்வி வலயத்தில் 23 பாடசாலைகளே இயங்குகின்றன

## வலயக் கல்விப் பணிப்பாளர் கிருஷ்ணகுமார்

(தெல்லிப்பளை)

வன்னியில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களால் முல்லைத்தீவுப் பிரதேசம் மிகவும் பாதிக்கப்பட்டது.. இங்கு ஏற்கனவே இயங்கி வந்த 55 பாடசாலைகளில் தற்போது 23 பாடசாலைகள் மட்டுமே இயங்குகின்றன என்று முல்லைத் தீவுக் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்ற சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அபபாக்குட்டியின் 86 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழாவில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து அவா உரையாற்றுகையில் -


முல்லைத்தீவு மாவட்டத்தின் சிதைந்துபோன கல்வி நிலையை மேம்பாடு அடையச் செய்வதற்கு எம்மால் எடுக்கக்கூடிய சகல முயற்சிகளையும் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வருகிறோம்.

தற்போது இயங்கும் பாடசாலைகளுக்குத் தேவையான பௌதீக வளங்களையும், கற்றல் உபகரணங்களையும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி வருகின்றன.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 86 ஆவது பிறந்தநாள் அறக்கொடை நிதியிலிருந்து கிடைத்த 2 லட்சம் ரூபாவைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரத்தில் இவ்வாண்டு கல்வி கற்று வரும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள நூறு மாணவர்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா வீதம் வழங்கவுள்ளோம்.

அம்மா, சமயத்தொண்டுடன் மற்றும் பொதுத் தேவைகளுக்கும் ஆண்டுதோறும் தனது பிறந்தநாள் அறக்கொடை நிதியிலிருந்து லட்சக்கணக்கான ரூபாவை வழங்கி வருவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

அம்மா செய்துவந்த தொண்டுகளையும், அவருக்குப் பின் தேவஸ்தானத் தலைவராக இருந்து அவரது செயற்பாடுகளைப் பின்பற்றி அவற்றை நினைவாகச் செய்துவரும் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனுக்கும், ஆலய நிர்வாக சபையினருக்கும் நன்றி கூறுவதில் பெருமையடைகிறேன் எனத் தெரிவித்தார்.



கிளிநொச்சி சி.எ.சி.எம் திருச்சபையின் திரு.திருமதி வல்லிபுரம் மாணிக்கம் தம்பதிகளின் மகன் அருட்திரு எம்.ஜெயானந்தம் குரு அபிஷேகம் பெற்று, தன் சபையில் முதலாவது நற்கருணை வழிபாட்டை நடாத்துவதையும் அதில் கலந்து கொண்டோரையும் காணலாம்.

## இசை நிகழ்ச்சியில் சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

டான் தொலைக்காட்சியின் 11 ஆவது ஆண்டினை முன்னிட்டு முற்றவெளிப்பகுதியில் இடம்பெற்ற இசைநிகழ்ச்சியின் போது துவிச்சக்கரவண்டி ஒன்று திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

துவிச்சக்கரவண்டியைப் பறிகொடுத்த நபர் இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், துவிச்சக்கரவண்டியைத் திருடியவர் அன்றைய தினம் வேறு துவிச்சக்கரவண்டிகளையும் திருடமுற்பட்டபோது பொலிஸார் திருடனை மடக்கிப் பிடித்ததாகவும் இதன்பின்னர் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு துவிச்சக்கரவண்டியை உரியவரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (57)

## பாவற்குளத்தின் வான் கதவுகள் நான்கு திறந்து விடப்பட்டுள்ளன

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பெய்த கடும் மழையினால் பாவற்குளத்தின் 4 வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

இதன் காரணமாக குளத்தின் மேலதிக நீர் பாரியளவில் வழிந்தோடுவதால் நெளுககுளம் நேரியக்குளம் வீதி, பூவரசங்குளம் - செட்டிக்குளம் வீதி, ஆகியன தற்காலிகமாக போக்குவரத்துக்குத் தடை செய்யபபட்டுள்ளதாக தொிவிக்கப்படுகிறது.

இவ் வீதிகளூடாக 4 அடிக்கு மேல் நீர் பாய்ந்து செல்வதால் வீதியால் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் மற்றும் ஆபத்தான நிலையாக இருப்பதால் இவ்வீதியால் மக்கள் பயணம் செய்ய வேண்டாம் என, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பொதுமக்களை கேட்டுள்ளார்.

இதேவேளை, வவுனியாவில் இருந்து திருகோணமலை செலலும் கொரவப்பத்தானை பாதையூடான வீதி தடைப்பட்டுள்ளது.

இவ்வீதியூடாக வெள்ளம் குறுக கறுத்துப் பாய்வதால் பல வீதி கள் வெள்ளத்தினால் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வவுனியா திருகோணமலைக்கிடையில்ன பஸ்சேவை வவுனியாவிலிருந்து மதவாச்சியூடாகத் திருகோணமலைக்குச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது நீண்டதூரப் பயணம் எனவும் வழமையான பாதையூடாகச் செல்லும்போது 2 மணித்தியாலம் செலவிடப்படுவதாகவும் இப் பாதையூடாகச் செல்வதற்கு 5 மணித்தியாலம் செலவிடப்படுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (39)

## கிராம சேவகர்களுக்கான காணி உரிமக் கருத்தரங்கு

(சண்டிலிப்பாய்)

வீட்டு வசதிகள் மற்றும், வீட்டு உரிமைகளுக்கான அமைப்பினரால், கிராம சேவகர்களுக்கான நில உரிமைச் சட்டம் தொடர்பான கருத்தரங்கொன்று கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய இரு தினங்களும், தியாகி அறக்கொடை நிலையத்தில் நடத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கிற்கு யாழ் மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் 200 இற்கும் மேற்பட்ட கிராமசேவகர்கள் விண்ணப்பித்திருந்தனர். எனினும் தற்போது மீள்குடியேற்றம் இடம்பெறும் பகுதிகளைச் சேர்ந்த 46 கிராம சேவகர்களே பிரதேச செயலகர்கள், அரச அதிபரால் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாறு பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களுக்கு நில உரிமை, காணிதொடர்பான ஆதனங்களின் பிணக்குகள் போன்ற விடயங்கள் தொடர்பாக, முன்னாள் வடக்கு, கிழககு மாகாண காணிப்பதிவாளர் அலுவலக பணிப்பாளர் கு. குருநாதன் மற்றும் விரிவுரையாளர் ஹக்கீா ஆகியோா் விளக்க உரைகளை நிகழ்த்தினர்.

இத்திட்டத்திற்கான நிதியுதவியை யு. எஸ். எயிட் நிறுவனம் அளித்தமை குறிப்பிடத் தக்கது.

மேற்படி அமைப்பினர் இலங்கையின் பல மாவட்டங்களில் இந்தக் கருத்தரங்கினை நடத்தி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (54)

## இலக்கியச் சந்திப்பு

(தும்பளை)

புலோலியிலுள்ள அறிவோர் ஒன்றுகூடல் இலக்கியச் சோலையில், இலக்கியச் சந்திப்பு இன்று நடைபெறவுள்ளது.

இ.து குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் ஜேர்மனியிலிருந்து வருகை தந்துள்ள எழுத்தாளர் பொ. கருணாகரமூர்த்தி கலந்து கொள்வார். (62)

## குடாநாட்டில் அதிகரித்துள்ள தொற்றுநோய்களின் தாக்கம்

(யாழ். நிருபர்)

யாழ். குடாநாட்டில் காய்ச்சல். தடிமல், சளி போன்ற தொற்று நோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது. தற்போதைய சீரற்ற காலநிலையும் மழை வட்டுவிட்டுப் பெய்வதுமே இந் நோயின் தாக்கத்திற்குக் காரணம் என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். சளி, காய்ச்சல், தடிமல் போன்ற நோய்க்கு இலக்காகிச் சிகிச்சை பெறுவோரின் எணணிக்கை யாழ் போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவில் அதிகரித்துக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இநதத் தாக்கத்திற்கு நுளம்புகளின் பெருக்கமும் மற்றொரு காரணம் என்று அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (18)

## சமுதாய சுகாதாரக் குழு குருநகரில் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோயின் தாக்கம் மற்றும் பெருகும் வேகம், அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களைக் கருத்திற்கொண்டு குருநகர் பகுதியில் "சமுதாய சுகாதாரக் குழு" கடந்த சனிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பிரதம பொது சுகாதார பரிசோதகரின் ஆலோசனைக்கு அமைவாக அமைக்கப்பட்ட இக்குழு, கிராம சேவகர், சுகாதார பாதுகாவலர், பொது சுகாதார பரிசோதகர். மாநகரசபை ஊழியர்கள் எனப் பலரை அங்கத்துவமாகக் கொண்டு இயங்குகிறது. இக்குழு குருநகர் பகுதிகளில் ஒலி பெருக்கி மூலம் டெங்கு ஒழிப்புப் பிரசாரம் மேற்கொண்டு வருவதுடன் வீடுகள் தோறும் சென்று நோய் தொடர்பான விழிப்புணர்வு, நுளம்பு பெருகக் கூடிய இடங்கள் தொடர்பாகத் தெளிவு படுத்திவருகின்றன.

இக்குழு இப்பகுதிகளில், பி. ரி. ஐ. பக்ரீறியா, "எபயிற்" போனற நுளம்பு எதிர்ப்பு மருந்துகளை விசிறும் நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளது. (54)

## இன்றைய பலன்

(14.01.2011 வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புகள்**

விகிர்தி மார்கழி 30

இராகுகாலம் 11.04 -12.34, சுபநேரம் 6.34 - 8.04,

பரணி மு.இ. 11.22 வரை, தசமி முழுவதும் சித்தம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

-ஆதினி-

மேடம்:- வெளிநாட்டுச் செய்தி, பணவரவு, தொழிலுக்காகப் பயணம்.

ரிஷபம்:- வீண்செலவு, தேகநலன் பாதிப்பு, குடும்பச்சுமை.

மிதுனம் :- பிதாவழி பணவரவு, தொழிலில் இலாபம், நண்பர் உதவி.

கடகம்:- மதிக்கப்படல், முயற்சியில் வெற்றி, தேகாரோக்கியம்.

சிம்மம்:- அவமானப்படல், நண்பருடன் விரோதம், மேலதிகாரி பகை.

கன்னி :- காரிய சித்தி, மாதாவழியால் பணம், விருந்துணவு.

துலாம் :- பெரியோரை மதித்தல், பெற்றோர்க்குதவி, சகோதரரின் சுபநிகழ்வு.

விருச்சிகம் :- தொழிலில் மேன்மை, அதிக இலாபம், மதிப்பு உயர்வு.

தனுசு:- பணத்தட்டுப்பாடு, அதிகாரியுடன் முரண்பாடு, மனக்குழப்பம்.

மகரம்:- பாராட்டப்படல், அதிகலாபம், தொழில் விருத்தி.

கும்பம் :- விருந்துணவு, இனத்தார் சேர்க்கை, முயற்சியில் வெற்றி.

மீனம்:- நினைத்த காரியத்தடை, நண்பர் விரோதம், இனசனப் பகை.

# நிறைவேற்றமுடியாத கோரிக்கைகளை கூட்டமைப்பு முன்வைக்கக் கூடாதாம்

## என்கிறார் அமைச்சர் சம்பிக்க



(கொழும்பு)

மக்களின் ஆணை கிடைக்கப்பெற்றுள்ள மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு வேலைத்திட்டத்துக்கு அமைவாகவே அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். அதேவேளை நாட்டின் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்களில் கலந்துகொள்ளவேண்டும் என்று ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரும் மின்சக்தி அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் அரசாங்கத்தின் அமைச்சர்களும் சந்தித்துப் பேச்சு நடத்தியமை மற்றும் தொடர்ந்து சந்திப்புக்களை நடத்த இணங்கியுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார். அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது தமிழ்த் தேசியக் கூடடமைப்புக்கு மக்களின் ஆணை கிடைத்துள்ளது. இந்நிலையில் அவர்கள் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தலாம். அவ்வாறான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக நாங்களும் அறிந்துகொண்டோம். ஆனால் அரசாங்கத்துக்கு மஹிந்த சிந்தனை எதிர்கால வேலைத்திட்டத்துக்கு அமைவாகவே அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டும்.

மேலும் தமிழ்த் தேசியக் கூடடமைப்பானது நாட்டின் தற்போதைய யதார்த்தத்தை உணர்ந்துகொண்டு ஆளும் கட்சியுடன் பேச்சு நடத்தவேண்டும் நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளை முன்வைக்காது யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். சிங்கள சமூகம் கோபித்துக் கொள்ளும் வகையில் தமிழ்க் கூட்டமைப்பினர் நடந்துகொள்ளக்கூடாது. தமிழ் மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்பம் பொறுப்பு தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு இருக்கின்றது. கடந்தகாலங்களில் தமிழ்த் தலைவர்கள் செயற்பட்டவிதமே தமிழ் மக்கள் அபிவிருத்தி 30 வருடங்களில் பின்னுக்கு சென்றமைக்குக் காரணமாகும். எனவே எதிர்காலத்தைச் சிறப்பானதாக அமைத்துக்கொள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் அவசரகாலச்சட்டத்தை நீக்கவேண்டும்

## ரில்வின் சில்வா கோரிக்கை



(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார். யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது அவசியமற்றதென அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் மார்ச் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு முன்னர் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். எதிர்க்கட்சியினர் பிரசாரம் நடத்துவதனைத் தடுக்கும் நோக்கில் 1970 ஆம் ஆண்டு அவசரகாலச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவசரகாலச் சட்டத்தின் மூலம் தேர்தல் பிரசாரங்களை சுதந்திரமான முறையில் முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்தம் நிறைவடைந்து இரண்டாண்டுகள் பூர்த்தியாகவுள்ள நிலையில் தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது நியாயமற்றதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் யுத்தத்தைக் காரணம் காட்டி அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீடித்ததாகவும் நியாயப்படுத்துவதற்கு எவ்வித காரணங்களும் கிடையாது எனவும் அவர் தெரிவித்தார். இதேவேளை, பயங்கரவாத நடவடிக்கைகள் மீளவும் தலைதூக்காமல் இருப்பதனை உறுதிசெய்யும் நோக்கில் அவசரகால சட்டம் நீடிக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

# வெள்ளத்தால் மக்கள் அவலநிலையில் பார்வையிடச்சென்ற அமைச்சரோ தங்குவதற்கு தேடினார் ஹோட்டல்




(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களைப் பார்வையிட கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்குச் சென்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் முதலில் தனக்கு தங்குவதற்கென ஹோட்டல் ஒன்றைத் தேடியதாக ஜே. வி. பி. தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த பிரசார செயலாளர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது: அதிக மழை காரணமாக இதுவரையில் 8 லட்சத்து 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று 5 லட்சம் பேர்வரை இடம்பெயர்ந்துள்ளதாக அரசாங்கமே கணிப்பீடுகள் மூலம் கூறியுள்ளது. இதில் அதிகம் மட்டக்களப்பு மாவட்டமே பாதிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களுக்கு அரச அதிகாரிகள் எவரும் சென்று மக்களுக்கு இதுவரையில் நிவாரணம் வழங்கவில்லை. நேற்று முன்தினம் மட்டக்களப்புக்குச் சென்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் முதலில் தனக்கு இருப்பிடத்திற்காக ஹோட்டல் ஒன்றையே தேடினார். ஆயிரக்கணக்கான மக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளனர். அவர்களை மீட்டெடுக்க அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத் திட்டம் போதுமானதல்ல என்றார் விஜித ஹேரத்.

# அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி இந்தியா கவலை என்கிறது விக்கிலீக்ஸ்




(கொழும்பு)

அம்மாந்தோட்டை நகரில் சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் துறைமுக அபிவிருத்தி திட்டம் தொடர்பில் இந்தியா கவலை கொண்டுளளதாக தெரியவந்துள்ளது. அமெரிக்க இரகசிய இராஜதந்திர ஆவணங்களை வெளியிட்டு வரும் விக்கிலீஸின் பிந்திய வெளியீகளில் இந்த விடயம் தொடர்பான தகவல்கள் அடங்கியுள்ளதாக ஏஷியன் ட்ரிபியூன் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி 2007 ஆம் ஆண்டு என திகதியிடப்பட்ட இராஜதந்திர தகவல் பரிமாற்ற கோப்பில் இது தொடர்பான தகவல்கள் பரிமாற்றப்பட்டுள்ளன. இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் மோகன் குமார் புதுடில்லியிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் அரசியல் பிரிவு அதிகாரி டெட் ஒசிசுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இலங்கையில் சீனாவின் தலையீடு தொடர்பில் இந்திய அரசாங்கம் கவலை கொண்டுள்ளதாகக் கருத்து வெளியிட்டார்.

அம்பாந்தோட்டையில் சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் சீனா நிர்மாணித்து வரும் துறைமுகம் தொடர்பில் அமெரிக்க அரசாங்கம் முழுமையான ஆய்வொன்றினை மேற்கொள்வது தமக்கு உதவியாக அமையும் என மோகன் குமார் இந்த சந்திப்பின் போது அமெரிக்க தூதரக அதிகாரியிடம் தெரிவித்துள்ளார். இந்த இரகசிய ஆவணத்தில் சீனா, இலங்கை அரசாங்கத்தின் மீது கூடுதலான ஈடுபாட்டைக் கொண்டிருப்பதாகவும் மோகன்குமார் சுட்டிக்காட்டி சுட்டிக் காட்டியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மார்ச் மாதம் ஜனாதிபதியின் சீன விஜயத்தைத் தொடர்ந்து இலங்கை சீனாவில் மென்தளமாக மாற்றமடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். புலிகளுக்கும் அரசாங்க தரப்பினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்ற நிலையில் பாக்கு நீரிணையின் பாதுகாப்பு நிலைமைகள்மோசடைந்துள்ளதாகவும் இந்திய கடற்படை தமது சுற்றுக்காவல் நடவடிக்கைகளை அதிகப்படுத்தியுள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் மோகன் குமார் தெரிவித்துள்ளார்.

# சமாதான முனைப்பில் இந்தியத் தலையீடு; நோர்வே அரசாங்கம் விரும்பவில்லை

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முனைப்புக்களில் இந்தியா தலையீடு செய்வதனை அரசாங்கம் அதிகம் விரும்பவில்லை என விக்கலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் ஆதரவின்றி சமாதான முனைப்புக்களில் இந்தியா தலையீடு செய்யக் கூடாது என்பதே நோர்வே அரசாங்கத்தின் நிலைப்பாடாகக் காணப்பட்டதெனத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான முனைப்புக்கள் தொடர்பில் அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் வெளியிட்ட கருத்துக்கள் குறித்து நோர்வே திருப்தி அடைந்திருக்கவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தியாவுடன் புதிய பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் சமாதான முனைப்புக்களில் இந்தியாவிற்கு முக்கிய பங்கிருப்பதாகவும் அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியிருந்தார்.

2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் காலத்தில் நோர்வே மத்தியஸ்தம் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் குறித்து நோர்வே அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவிடம் அதிருப்தியை வெளியிட்டிருந்தது எனவும் விக்கிலீக்ஸ் மேலும் தெரிவித்தது.

# 61 வருடங்களின் பின்னர் கொழும்பில் கடும் குளிர்

(கொழும்பு)

சுமார் 61 வருடங்களின் பின்னர் கொழும்பு மாவட்டத்தில் ஆகக் குறைந்த வெப்பநிலை பதிவாகியுள்ளது. நேற்றைய தினம் கொழும்பு மாவட்டத்தின் வெப்பநிலை 18.8 பாகை செல்சியஸ்ஸாகக் காணப்பட்டதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

மேலும், நேற்றைய தினம் நுவரேலியா மாவட்டத்தில் 7.9 பாகை செல்சியஸ், மட்டக்களப்பில் 16.9 பாகை செல்சியஸ் வெப்பநிலையும் காணப்பட்டதாக அந்த நிலையம் அறிவித்துள்ளது. அத்துடன் நேற்றைய தினம் காணப்பட்ட இந்தக் குளிர் காலநிலை இன்றைய தினமும் நீடிக்குமென வானிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, இதற்கு முன்னர் 1950 ஆம் ஆண்டிலேயே ஜனவரி மாதம் ஆகக் குறைந்த வெப்பநிலையாக 15.2பாகை செல்சியஸ் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு கூடுதல் முனைப்புக் காட்ட வேண்டும்

## சிரேஷ்ட அமைச்சர் சரத்அமுனுகம



(கொழும்பு)

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த கூடுதல் முனைப்புக் காட்டப்பட வேண்டுமென சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார். பழையவற்றை நினைவுப்படுத்துவதனை விடவும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டு மக்களுக்கு சுபீட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் 86ஆவது நினைவு நாளை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார். பொன்னம்பலம் அருணாசலம் நாட்டுக்காக அரிய சேவைகள் ஆற்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். தமிழ், சிங்கள மக்கள் பழைய குரோதங்களை மறந்து நாட்டின் நன்மைக்காக அர்ப்பணிப்புடன் பாடுபட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

# கரப்பந்தாட்ட உள்ளக அரங்கை அமைத்துத் தருமாறு கோரிக்கை


(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சம்மேளன பிரதிநிதிகள் தமக்கென ஓர் கரப்பந்தாட்ட உள்ளக அரங்கொன்றை நிர்மாணித்துத் தருமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வேண்டுகோளை அடுத்து கரப்பந்தாட்ட உள்ளக அரங்கு நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்ட மைதானப்பகுதிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரடியாக விஜயம் செய்தார். யாழ். சுண்டுக்குளி றக்கா வீதியிலுள்ள மாநகர சபைக்கு உரித்தான மைதானப்பகுதிக்கு அமைச்சர் சென்றபோது யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் மாநகரசபை அதிகாரிகளும் உடனிருந்தனர். மைதானத்தின் நிலைமை மற்றும் சுற்றாடல் பகுதிகளைப் பார்வையிட்ட அமைச்சர், ஏற்கனவே அப்பகுதியில் இயங்கும் சனசமூக நிலையம் மற்றும் அப்பகுதி விளையாட்டுக்கழகம் என்பனவற்றிற்கு பாதிப்பு ஏற்படாதவாறு உள்ளக அரங்கு நிர்மாணிக்கப்பட வேண்டிய நிலைமை குறித்து முதல்வர் மற்றும் அதிகாரிகளுடன் ஆராய்ந்தார். இச்சமயம் யாழ்.கரப்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஏகாம்பரம், செயலாளர் மனோகரன் மற்றும் சம்மேளன நிர்வாக உறுப்பினர்களும் உடனிருந்தனர்.

கரப்பந்தாட்ட உள்ளக அரங்கொன்றை நிர்மாணிப்பது தொடர்பாக உரிய அறிக்கையொன்றைத் தருமாறு யாழ். மாநகர முதல்வரைப் பணித்த அமைச்சர், விரைவிலேயே சாதகமான பதிலைத் தாம் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். இச்சமயம் விளையாட்டுத்துறைக்கு குறிப்பாக கடந்த காலத்தில் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட கழகங்களுக்கும் சம்மேளனத்திற்கும் நிதியுதவியாகவும் பொருள் உதவிகளாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பெற்றுத்தந்த அனைத்து உதவிகளையும் நினைவுகூர்ந்த சம்மேளன நிர்வாகிகள் தமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.





யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் 2010ஆம் ஆண்டிற்கான சிறந்த கூடைப்பந்தாட்ட வீரராக யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவனும், சென்றல் லீட்ஸ் அணியைச் சேர்ந்த சு. பிரசன்னாவும், சிறந்த வீராங்கனையாக யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட தேசிய பாடசாலையின் பழைய மாணவியும், பமிலியன்ஸ் அணியைச் சேர்ந்தவருமான ர. சானுஜா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் கௌரவிக்கப்பட்டபோது... (52)

## 8 விக்கெட்டுக்களால் சென் ஜோன்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்படும் 13 வயதுப் பிரிவினருக்கான இரண்டாம் சுற்றுப் போட்டியிலேயே சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

50 ஓவர்களைக் கொண்ட இந்தப் போட்டி நேற்று முன்தினம் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய ஆடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 38. 1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிலோஜன் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சிவேஸ்கர் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 76 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, 35.1 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் லக்சி 25 ஓட்டங்களை, ஆட்டமிழக்காது பெற்றார். மற்றும் சிவதர்சன் 10 ஓட்டங்களைப் பெற்றார். (எஸ்)



பிரேசிலின் கால்பந்தாட்ட வீராங்கனை மார்தாவுக்கு சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் (பீபா) 2010ஆம் ஆண்டுக்கான சிறந்த கால்பந்து வீராங்கனைக்கான விருது வழங்கப்பட்டது. இதன் மூலம் தொடர்ச்சியாக ஐந்தாவது முறையாகவும் இவ்விருதை வென்று மார்தா சாதனை படைத்துள்ளார்.

இது குறித்து மார்தா தெரிவிக்கையில், ஐந்தாவது முறையாகவும் இந்த விருதை வென்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இதன் மூலம் எமது நாட்டைப் பெருமையடைச் செய்வதாகவே நான் நினைக்கின்றேன் என்றார்.

## இரண்டாவது முறையாகவும் விருது மகிழ்ச்சி என்கிறார் லியோனல் மெசி



சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் சிறந்த வீரருக்கான விருதை இரண்டாவது முறையாகவும் வென்றிருப்பது மகிழ்ச்சியானது. இவ்வாறு ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திரக் கால்பந்து வீரர் லியோனல் மெசி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த விருது இரண்டாவது முறையாக எனக்கு மீண்டும் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்க்காத நேரத்தில் கிடைப்பதில் இருக்கும் மகிழ்ச்சி என்பது சொல்லில் அடங்காதது.

கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரில் எமது அணி சிறப்பாக விளையாடவில்லை. என்பது உண்மை. அது கவலைக்குரிய விடயம. அந்தத் தொடரில் நாங்கள் அனைவரும் சிறப்பாகச் செயற்படவில்லை.

இருந்தும் கழக மட்டப் போட்டிகளில் நான் சிறப்பாக விளையாடினேன். எனவே, இந்த விருதை வென்றதில் மகிழ்ச்சியடைகின்றேன் என்றார்.

## கங்குலியின் அனுபவத்தை பயன்படுத்தியிருக்கலாம்!

(இஸ்லாமாபாத்)

சௌரவ் கங்குலியின் அனுபவம், தலைமைத்துவச் சிறப்பு ஆகியவற்றை எந்த அணியாவது பயன்படுத்தியிருக்கலாம் என பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் வசிம் அக்ரம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கங்குலி எனது நெருங்கிய நண்பர். அவரை எந்த அணியாவது ஏலத்தில் எடுக்கும் என நினைத்திருந்தேன். அது நடக்கவில்லை. இதனால் நான் மிகுந்த ஏமாற்றம் அடைந்தேன். அவரிடம் சிறந்த தலைமைத்துவம் உள்ளது. நல்ல அனுபவம் உள்ளது இவற்றை எதாவது ஒரு அணி பயன்படுத்தியிருக்கலாம் என்றே நான் நினைக்கின்றேன். அவரை அனைத்து அணிகளும் முற்றிலும் புறக்கணித்துள்ளது வியப் பாகவுள்ளது என்றார்.

## ரி-20 போட்டிகளில் இங்கிலாந்து சாதனை



(அடிலெய்ட்)

தொடர்ச்சியாக எட்டு ரி-20 போட்டிகளில் வெற்றிபெற்று இங்கிலாந்து அணி சாதனை படைத்துள்ளது.

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட ரி-20 போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் வென்றிபெற்றதன் மூலம் இச்சாதனையை இங்கிலாந்து அணி புரிந்துள்ளது.

இதற்கு முன்னர் பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகள் தொடர்ச்சியாக ஏழு வெற்றிகளைப் பெற்றதே இதுவரை சாதனையாக இருந்து வந்தது.

இச்சாதனை குறித்து இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவர் கருத்துத் தெரிவிக்கையில், இங்கிலாந்து அணி கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்தும் காலம் மெல்ல, மெல்ல கனிந்து வருகின்றது. இதற்கான ஆரம்பமே ஆஷஸ் தொடர் வெற்றி மற்றும் ரி-20 போட்டியின் இந்தச் சாதனையாகும்.

எனவே, எங்கள் இலக்கெல்லாம் கிரிக்கெட்டில் முதன்மையான வலம் வரவேண்டும் என்பதே. இந்த இலக்கு நிறைவேறும் காலம் வெகுதொலைவில் இல்லை என்றார்.

## மகேஷ் பூபதி - லாராதத்தா திருமணம் அடுத்த மாதம்

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னணி ரென்னிஸ் வீரர்களில் ஒருவர் மகேஷ் பூபதிக்கும் முன்னாள் உலக அழகி லாராத்தத்தாவுக்கும் இடையே கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நியூயோர்க்கில் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது.

இந்நிலையில் இவர்களது திருமணம் நடைபெறும் திகதி முடிவு செய்யப்பட்டது.

மகேஷ் பூபதி - லாராதத்தா திருமணம் அடுத்த மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோவாவில் உள்ள ஆடம்பர ரிசார்ட்சில் இந்தத் திருமணம் நடக்கிறது. இருவரும் முதலில் சந்தித்துக் காதலை பரிமாறிக் கொண்டது கோவாவில் தான். இதனால் அங்கு திருமணம் நடக்கிறது.

300 திருமண அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டு உள்ளது. உறவினர்கள்,



நெருங்கிய நண்பர்களுக்கு மட்டுமே திருமண அழைப்பிதழ் கொடுக்கப்படுகிறது.

மகேஷ்பூபதி ஏற்கனவே திருமணம் ஆனவர். சுவேதா ஜெய்சங்கரை திருமணம் செய்து சட்டபூர்வமாக விவாகரத்துப் பெற்றார். லாராதத்தாவுக்கு முதலில் கெல்லி டார்ஜி, டினோ மேரியாவுடன் தொடர்பு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளி விருந்து
# மகரஜோதி பெருவிழா

இறையருளின் வேண்டுதலைச் செய்யாமல் எந்த மானிடனும் இல்லை. இறைவனை ஜோதியாகக் காண்பது சைவம். அடிமுடிதேடிய இரு மூர்த்திகளின் ஆணவத்தை ஜோதிவடிவாகக காண்பித்து அடக்கிய வரலாறுகளை அறிவோம்.

இவ்வகை வரலாற்று உண்மை வழியே சபரிமலை ஐயப்பன் மணிகண்டனாக இரு மூர்த்திகளின் தேஜஸ் சந்தித்த நேரத்தில் கையிலே தோன்றியவன். பந்தள நாட்டு மன்னன் வளர்ப்பில் வளர்ந்து கல்விகற்கும் பருவத்தில் தன் குருவிற்குக் குருவானவன். தாயின் நோய் தீர்க்க புலிப்பால் கொணர்ந்து தன் தெய்வீகத்தின் உண்மையைப் புலப்படச் செய்தவன். தந்தையாகிய பந்தள மன்னனின் வேண்டுதலுக்கு அமைய அம்பு எய்து சபரிமலையைக் குறித்துக் காண்பித்தான். அவ்விடத்தில் ஆலயம் அமைத்து ஐயப்பனை பிரதிஷ்டை செய்த நாள் தமிழ் தை மாதம் முதலாம் திகதி தைப்பொங்கல் தினமாகும். பிரதிஷ்டை செய்த நேரம் ஐயப்பனின் திருவுருவத்தில் இருந்து தோன்றிய ஒளியே ஜோதியாக பந்தளத்து மன்னன் கண்டு ஆனந்தித்த பேரொளியாகும்.

சூரியன் தை மாதம் முதலாம் திகதி தனுராசியில் இருந்து மகர ராசிக்குத் திரும்பும் நாளாகும். இதனால் ஐயப்பன் ஜோதியாகக் காணும் நாள் மகரஜோதி என்றும், சிறப்பிக்கும் நேரமும் பொன்னான நேரம் ஆகும். இந்த ஜோதியை சபரிமலை ஐயப்பன் தேவஸ்தானத்தில் இருந்து பார்க்கும் போது பொன்னம்பல மேட்டிலே சிறப்பாகக் காணமுடியும்.

அடியார்கள் இப்பேரருட் காட்சியைக் காண்பதற்கு விரத அனுஷ்டானங்களைக் கடைப்பிடித்து, மாலை அணிந்து, கருங்காவி கட்டி, ஐயப்ப சாமியாகத் தம்மைக் குருசாமி துணையுடன் ஆக்கிக் கொள்கின்றனர்.

தமிழ் கார்த்திகை முதலாம் திகதி தொடக்கம் தமிழ் தைமாதம் முதலாம் திகதிவரை தம்மைத் தாமே புனிதர்களாக்கி பதி னெட்டுப்படி ஏறி நெய் அபிஷேகம் செய்து ஐயப்பன் தரிசனம் காண்பர்.

இச் செயற்பாடுகளின் பின்னர் காணும் பேரொளியே "மகர ஜோதி" யாகும்.

மகரஜோதி காணும் பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை, ஐயப்ப விரதம் தன்னையொறுத்துத்தான் தன்னையே அதற்கென அர்ப்பணிக்கும் பாக்கியம் பெறும் வினைப்பயனை உருவாக்கும் நிலைபெற்றவர்களே நேரடியாக நெய்அபிஷேகம், மகரஜோதிதரிசனம் செய்ய முடியும்.

*சாமியே சரணம் ஐயப்பா!*

# தேனிலவுக்குச் சென்ற அழகுராணி ஹோட்டல் அறையில் கொலை



தேனிலவைக் கொண்டாடுவதற்காக மொரிஷியஸ"க்குச் சென்ற அயர்லாந்து அழகு ராணியொருவர் ஹோட்டல் அறையில் வைத்துக் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

ஆசிரியையாகப் பணியாற்றிய மிக்கேலா மிக்அரியாவி என்ற 27 வயதான பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். இவர் கால்பந்தாட்ட அணியொன்றின் முகாமையாளரின் மகள் ஆவார்.

இந்திய சமுத்திர நாடான மொரிஷியஸின் பொலிஸார் இக்கொலை தொடர்பாக நேற்று இரவு மூவரைக் கைது செய்துள்ளனர்.

மிக்கேலாவின் சடலம் அவரின் கணவர் ஜோனினால் கண்டுபிடிக்கப்பட்டது. கால்பந்தாட்ட வீரரான ஜோன் இரு வாரங்களுக்கு முன் மிக்கேலாவைத் திருமணம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரேசிலில் வெள்ளம்; நிலச்சரிவில் 260 பேர் உயிரிழப்பெனத்தகவல்



(ரியோடி ஜெனீரோ)

பிரேசில் நாட்டில் சில நாட்களாகப் பலத்த மழை கொட்டி வருகிறது. இதனால் ரியோடி ஜெனீரோ மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.இதில் டெரசோ போலில் நகரத்தின் அருகே உள்ள ஆறு கரை உடைந்து நகரப் பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்தது.

இதனால் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியதுடன் நிலச்சரிவும் ஏற்பட்டது. டெரசோ போலில் மற்றும் டெட்ரோபோலில் ஆகிய நகரங்கள் மலைப்பகுதியில் அமைந்துள்ளன. இங்கும் வெள்ளம் புகுந்தது. இதில் பெரிய அளவில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கி இரு நகரங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் 260 பேர் பலியானார்கள்.




நூற்றுக்கணக்கானோரைக் காணவில்லை. அவர்களில் பலரை வெள்ளம் அடித்துச் சென்று விட்டது. பலர் நிலச்சரிவில் சிக்கிப் புதைந்து கிடக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் 800 பேர் கொண்ட மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர். கடற்படையும் வரவழைக்கப்பட்டுள்ளது.

அவர்கள் வெள்ளத்தில் சிக்கித் தவிப்பவர்களை ஹெலிகொப்டர் மூலம் மீட்டு வருகின்றனர். வெள்ளம் பாதித்த பகுதிகளை அதிபர் தில்மா ரூசப் பார்வையிட்டு மீட்புப் பணிகளை முடுக்கி விட்டார். வெள்ள நிலைமை மோசமாக இருப்பதால் ரியோடி ஜெனீரோ பகுதியில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது

# சீனத்தின் 258 நகரங்களில் அமில மழை நிலம், நீர், காற்று மாசுபடுகின்றன

(பெய்ஜிங்)

உலகமே பார்த்து வியக்கும் சீன நாட்டில் தொழில் வளர்ச்சியின் வேகம் அனைவரையும் பிரமிக்க வைக்கிறது. அதற்கு அந்த நாடு கொடுக்கும் விலையை, நினைத்தாலே அச்சமாக இருக்கிறது.

ஆண்டுக்கு 300 கோடி டன் நிலக்கரியை எரித்து மின்சாரம் தயாரித்து தன்னுடைய ஆலைகளுக்கு இடைவிடாமல் அளித்துக் கொண்டிருக்கும் சீனாவுக்குப் பரிசாகக் கிடைப்பது அமில மழைதான். "சீனா டெய்லி" என்ற அரசு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சுற்றுச்சூழல் கண்காணிப்புப் பிரிவு தலைமைப் பொறியியலாளர் "வாங் மஷான் இதைக் கவலையுடன் தெரிவிக்கிறார்.

இந்த அமில மழையால் மக்களுக்கு தோல் வியாதி, சுவாசக் கோளாறு, இதயம், நுரையீரல்களில் பாதிப்பு, ஒவ்வாமை போன்றவை ஏற்படுகின்றன. அத்துடன் மக்களுடைய சாப்பாடு,தூக்கம், ஓய்வு, மன அமைதி ஆகியவை யும் ஏதோ ஒரு விதத்தில் பாதிப்படைந்து வருகிறது.

இந்த அமில மழையால் சீனத்தின் பழம்பெரும் புராதனச் சின்னங்களும் சுற்றுலாத்தலங்களும் பொலிவிழந்து வரு கின்றன. அந்த நாள் கட்டடங்கள் நிறம் மங்கிப் பழுப்பேறி வலுவிழந்து வருகின்றன. பயிர், பச்சைகளும் இதனால் பாதிப்பு அடைந்து வருகின்றன.

# ஜனாதிபதி ஒபாமாவின் செல்வாக்கு அமெரிக்காவில் திடீரென அதிகரிப்பு



(வொஷிங்டன்)


ஒபாமா, அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற நேரத்தில் அமெரிக்காவின் பொருளா தாரம் சரிந்திருந்தது. வேலை வாய்ப்பும் கிடைக்க வில்லை. இதை அவர் சரி செய்து விடுவார் என்று அமெரிக்கர்கள் நம்பினார்கள்.

ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி ஒபாமாவால் செய்ய முடியவில்லை. எனவே அவருடைய செல்வாக்குச் சரிந்தது. ஆனால் இப்போது பொருளாதார சரிவு ஓரளவு சீராகி உள்ளது.

இதனால் ஒபாமாவுக்குச் செல்வாக்கு அதிகரித்து வருகிறது. கடந்த டிசம்பர் மாதம் நடத்தப்பட்ட ஆய்வில் அவருக்கு 45 சதவீதம் பேரே ஆதரவு தெரிவித்தனர். ஆனால் இப்போது நடத்தப்பட்ட ஆய்வில் 50 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்து உள்ளனர். 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒபாமா பதவி ஏற்று 100 நாட்கள் ஆகி இருந்த போது அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அமெரிக்க பொருளாதாரத்தை இப்போது சரியான பாதையில் பயணம் செய்ய வைத்திருக்கிறேன். இதன் மூலம் அமெரிக்காவில் முன்னேற்றம் ஏற்படும் என்று கூறியிருந்தார். அவரது கூற்று உண்மை தான் என்று சொல்லும் அளவுக்கு இப் போது பொருளாதார சரிவு சீராகி உள்ளது.

அமெரிக்க பொருளாதாரம் சரியான திசையில் செல்வதாக 79 சதவீதம் பேர் இப் போது கருத்து தெரிவித்து உள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் 36 சதவீதம் பேரே பொருளாதாரம் சரியாகச் செல்வதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாணவிகள் இறுக்கமான ஜீன்ஸ் அணிய ஈரான் அரசாங்கம் விதித்தது தடை



(தெஹ்ரான்)

ஈரானில் மாணவிகள் இறுக்கமான ஜீன்ஸ் அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் நாடான ஈரானில் கல்லூரி மாணவிகள் உடைக் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இஸ்லாமிய முறைப்படி ஆடைகள் அணிய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவிகள் இறுக்கமான ஜீன்ஸ், பேண்ட் அணிந்து வரக் கூடாது.

நீளமான நகம் வளர்த்து அவற்றில் சாயம் பூசக் கூடாது. மிகவும் பிரகாசமான வண்ண ஆடைகளை அணியவோ, உடலில் பச்சை குத்தவோ கூடாது என்று அந்நாட்டு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாணவிகளுக்கு மட்டுமின்றி மாணவர்களுக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதன்படி அவர்கள் தங்கள் தலை முடிகளில் சாயம் பூசக்கூடாது. கண் இமைகளை சரிசெய்யக் கூடாது. மாணவிகளைக் கவரும் வகையில் இறுக்கமான ஆடைகள், சட்டைகள் மற்றும் கையில்லாத சட்டைகள், நகைகள் அணியவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர பெண்களுக்கான உடைக் கட்டுப்பாடுகளும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. தலையில் துணியின்றி தொப்பி அணியக் கூடாது. மேலும் உடல் தெரியும்படி இறுக்கமான மற்றும் குட்டையான ஜீன்ஸ் அணியக் கூடாது. நீளமான நகம் வளர்க்கவோ, இறுக்கான ஓவர் கோட் அணியவோ, கண்ணைப் பறிக்கும் உடைகளை அணியவோ கூடாது. காதுகளில் வளையங்கள் மட்டும் அணியலாம். அவை தவிர ஆடம்பர நகைகளை அணியவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்கத்திய நாடுகளின் கலாசாரம் பரவுதலைத் தடுக்க ஈரானில் கடந்த 1979ஆம் ஆண்டு இஸ்லாமிய சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது குறித்து பிரசாரம் செய்யப்பட்டும் வருகிறது. இந்த நிலையில் தற்போது மேலும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

# ஆப்கானிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல் 4 பேர் பலி; இருபத்தொன்பது பேர் காயம்!

(காபூல்)





ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நாடாளுமன்றம் மற்றும் அமைச்சர்கள் அலுவலகங்கள் உள்ளன. அதன் அருகே நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைப் படைத் தீவிரவாதி தன் உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்ததில் வீதியில் சென்று கொண்டிருந்த ஒரு மினி பஸ், ஒரு கார் ஆகியவை பலத்த சேதம் அடைந்ததுடன், அவற்றில் பயணம் செய்த 4 பேர் பலியாகினர். 29 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். அவர்களில் ஒருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட மினி பஸ்ஸில் உளவுத்துறையினர் பயணம் செய்தனர். இச்சம்பவம் நடந்த இடத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. கடந்த மாதம் நடந்த 2 தற்கொலைத் தாக்குதலில் ராணுவ பஸ் தகர்க்கப்பட்டது. அதில் 5 ராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

# இந்திய - பாகிஸ்தான் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணலாம்

## பிரணாப் முகர்ஜி நம்பிக்கை



(புதுடில்லி)

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான பிரச்சினைகளை முறையான பேச்சுவார்த்தையின் மூலமாகத் தீர்க்க முடியும் என்று வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவின் அண்டை நாடான பாகிஸ்தான் குறித்து பிரபல பத்திரிகையாளர் எம்.ஜே. அக்பர் புத்தகம் ஒன்றை எழுதினர். அவர் எழுதிய, அந்தப் புத்தகத்தின் வெளியீட்டு விழா நிகழ்ச்சி டெல்லியில் நடைபெற்றது.

விழாவில், வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி கலந்து கொண்டு, பாகிஸ்தான் குறித்து அக்பர் எழுதிய புத்தகத்தினை வெளியிட்டுச் சிறப்பித்தார்.

அப்போது, அண்டை நாடுகளுடன் இந்தியாவிற்கு பல பிரச்சினைகள் இருக்கலாம். இருப்பினும், அண்டை நாடுகளுடனான நல்லுறவினை இந்தியா ஒருபோதும் கைவிடாது என்று பிரணாப் முகர்ஜி கூறினார்.

மேலும், நாம் நண்பர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஆனால், அண்டை நாடுகளை தேர்ந்தெடுக்க முடியாது என்றும், பிரச்சினை காரணமாக நம் அருகில் உள்ள அண்டை நாட்டினை இடம் மாற்ற முடியாது என்றும் வெளியுறவு அமைச்சர் கூறினார்.

பாகிஸ்தானை மட்டும் தவிர்த்து விட்டு, தென்கிழக்கு ஆசியா வளர்ச்சி பெற முடியாது. அதேசமயத்தில், பாகிஸ்தானும் பல்வேறு துறைகளில் இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டால் தான், பாகிஸ்தானின் வளர்ச்சிக்கும் நல்லது என்று அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளும் பதற்றத்துடனே ஒவ்வொரு நிமிடமும் வாழ முடியாது. இந்தியா - பாகிஸ்தான் இடையே முறையான பேச்சுவார்த்தை நிகழ்த்துவதன் மூலம், இரு நாடுகளிலுமே பதற்றம் தணிந்து அமைதி நிலவ வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் என்று பிரணாப் தெரிவித்தார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே முறையான பேச்சுவார்த்தை நடத்தினால், இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள பிரச்சினையை சுமுகமாக தீர்க்கலாம் என்று வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி மிகுந்த நம்பிக்கையுடன் இருப்பதாக தெரிவித்தார்.




# அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த ரயில்வே அமைச்சர் மம்தா பானர்ஜி

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு



(சென்னை)

மத்திய ரயில்வே துறை அமைச்சரான மம்தா பானர்ஜி, திரிமுனல் காங்கிரஸ் கட்சியின் தலைவருமாவார். இவர் தற்போது, எதிர்கட்சிகளின் குற்றச்சாட்டிற்கு ஆளாகி, பெரும் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

திரிமுனல் காங்கிரஸ் கட்சியின சார்பில், கொல்கத்தாவில் கட்சிப் பேரணி ஒன்று நடைபெற்றது. அந்தப் பேரணியில், ரயில்வே பதாகையுடன் கூடிய மமதாவின் உருவம் வரையப்பட்ட பதாகை ஒன்று இடம் பெற்றிருந்தது.

அத்துடன், அந்தப் பதாகையில் தேர்தலுக்கு ஆயத்தமாகும் விதமான வாசகங்கள் உள்ளடங்கியதாகவும் கூறப்படுகிறது. இன்னும் நான்கு மாத காலங்களில், மேற்குவங்க மாநிலத்தில் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், தேர்தலுக்கு ஆயத்தமாகும் படியான கருத்துகள் அந்தப் பதாகையில் இடம்பெற்றிருந்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதுதவிர, மத்திய ரயில்வேத் துறை அமைச்சரான மம்தா அந்தத் துறையை தன் சொந்த நலனுக்காகப் பயன்படுத்தி வருகிறார் என்றும், அத்துறை அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வருகிறார் என்றும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளன.

# தனது இரு பிள்ளைகளையும் கடத்திக் கொன்ற தந்தை



(ஆர்க்காடு)

தமிழக வேலூர் மாவட்டத்தில் தனது இரண்டு பிள்ளைகளையும் தந்தையே கடத்திக் கொன்ற சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவருவதாவது -

வேலூர் மாவட்டம் ஆற்காடு அடுத்த மேல்விஷாரம் ஜமீலாபாத் 3 ஆவது தெருவைச் சேர்ந்தவர் முகமது அலி. இவர் சென்னை பூந்தமல்லியில் யில் களங்கியில் காப்பாளராக வேலை செய்து வருகிறார்.

இவரது மனைவி ஆஜிரா பேகம். இவர்களுக்கு தானியா (வயது 3), காஜியா நாஷிகா (2) என்ற இரண்டு பெண் குழந்தைகளும், 3 மாத முகமது தாஹா என்ற ஆண் குழந்தையும் இருந்தனர்.

இரண்டு நாட்களுக்கு முன்பு முகமது அலியின் மகள்களான தானியா தாஷிகா, காஜியா நாஷிகா ஆகிய இரண்டு குழந்தைகளையும் திடீரெனக் காணவில்லை. நேற்று முன்தினம் மாலை மேல்விஷாரம் தனியார் மருத்துவமனை அருகே கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் பாழடைந்த கிணற்றில் இரண்டு குழந்தைகளின் பிணம் மிதப்பதாக அந்தப் பகுதி மக்களிடம் தெரிவித்தனர்.

இது பற்றி தகவல் அறிந்த பொலிஸார் விரைந்து சென்று பிணங்களை வெளியே எடுத்து பார்த்த போது காணாமல் போன தானியா தாஷிகா, காஜியா நாஷிகா ஆகியோர்கள்தான் அவை என்பது தெரியவந்தது.

இதனால் அதிர்ச்சியில் உறைந்த பொலிஸார் இச்சம் பவம் குறித்து தனி போலீஸ் படை அமைத்து குற்றவாளியைத் தேடி வந்தனர். இந்த நிலையில் நேற்றுக்காலை தனது வீட்டி லிருந்த முகமது அலியை பொலிஸார் ஆற்காடு பொலிஸ் நிலையம் அழைத்து வந்து விசாரித்தனர்.

அப்போது அவர், தானே குழந்தைகளைக் கொன்றுவிட்டு ஒன்றுமே தெரியாத அப்பாவி போல் நாடகமாடிய திடுக்கிடும் தகவல் தெரிய வந்தது. அவர் பொலிஸில் அளித்த வாக்கு மூலத்தில் கூறியதாவது:-

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கும், ஆஜிரா பேகத்திற்கும் திருமணம் ஆன போது 35 பவுண் நகை போட்டு திருமணம் செய்து வைத்தனர். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்வதால் மாத வருமானம் 7 ஆயிரத்து 500 ரூபாய். இதில் எனது குடும்பத்தை நடத்துவது சிரமமாக இருந்தது. எதிர்காலத்தில் இரண்டு குழந்தைகளையும் எவ்வாறு படிக்க வைத்து திருமணம் செய்து வைப்பது என்ற மன உளைச்சலில் இருந்தேன்.

இந்த நிலையில், அதே பகுதியில் ஆசிரியராக வேலை பார்க்கும் எனது தம்பி அஷ்ரப் அலியிடம், அவனது மோட்டார் சைக்கிளை நேற்று முன்தினம் காலை வாங்கினேன். அவனிடம் சொந்த வேலை இருப்பதாகத் தெரிவித்துவிட்டு அவன் பள்ளிக்குச் சென்றதும், வீட்டில் யாரும் பார்க்காத நேரத்தில் எனது இரண்டு பெண் குழந்தைகளையும் மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்று இரண்டு கி.மீ. தொலைவில் உள்ள தனியார் மருத்து வமனை அருகே உள்ள பாழடைந்த கிணற்றில் வீசினேன்.

பின்னர் மோட்டார் சைக்கிளை எனது தம்பியிடம் கொடுத்துவிட்டு வீட்டிற்கு வந்தேன். இவ்வாறு கொலைக்கான காரணம் குறித்து முகமது அலி வாக்கு மூலத்தில் கூறியதாக பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. சம்பவம் தொடர்பாக முகமது அலியைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழர் வசிக்கும் மாவட்டத்தில் பொங்கல் விடுமுறை அறிவிப்பு



(சென்னை)

கேரளத்தின் முக்கிய பண்டிகையான ஓணம் பண்டிகைக்கு தமிழக அரசு விடுமுறை அறிவிக்கிறது.

அதேபோல் கேரளாவில் வசிக்கும் தமிழர்கள், தமிழர்களின் பண்டிகையான பொங்கல் திருநாளை கொண்டாட கேரள அரசு, அரசு விடுமுறை அளிக்க வேண்டும் என்று தமிழகத்தில் உள்ள தமிழ் அமைப்புகள், திமு.க., விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகிய கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன.

தமிழர்கள் அதிகம் வாழ்கின்ற இடுக்கி, திருவனந்தபுரம், பத்தினம்திட்டா, பாலக்காடு, காசர்கோடு ஆகிய மாவட்டங்களில் பொங்கல் திருநாளன்று விடுமுறை வழங்க மந்திரி சபை தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

பிறகு நிருபர்களிடம் பேசிய முதல்- மந்திரி வி.எஸ்.அச்சுதானந்தன், தமிழக முதல்-அமைச்சர் கருணாநிதியின் வேண்டுகோளை ஏற்று இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார். பொங்கலன்று, 5 மாவட்டங்களிலும் அரசு அலுவலகங்கள், பாடசாலைகள், கல்லூரிகள் இயங்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இருசக்கர வாகனங்களை மாற்றம் செய்து மாற்றுத்திறனாளிகள் ஓட்டுநர் உரிமம் பெறலாம்

## தமிழக அரசு அறிவிப்பு

(சென்னை.)

தமிழக அரசு போக்குவரத்து துறை ஆணையர் மு.ராஜாராம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகள் போக்குவரத்து வசதியை கருத்தில் கொண்டு அனைவரும் பயன்படுத்தும் இருசக்கர வாகனங்களை தங்களுடைய உடல் அங்கங்களின் குறைபாட்டிற்கு ஏற்றவாறு மருத்துவ சான்றின் அடிப்படையில் வாகன மாற்றம் செய்து கொள்ள மத்திய அரசு கடந்த 2008-ம் ஆண்டு தீர்மானம் வெளியிட்டது.

இந்த தீர்மானத்தை தமிழக அரசு, 2009-ம் ஆண்டு முறை அறிவிப்பு வெளியிட்டது. அதன் அடிப்படையில் ஓசூர் டி.வி.எஸ். மோட்டார் கம்பெனி நிறுவனத்தினர், தாங்களாகவே முன் வந்து தங்களது இரு சக்கர வாகனங்களை மாற்றி அமைத்துக் கொள்ளத் தேவையான உதிரிப் பாகங்களைத் தயார் செய்து பூனாவில் உள்ள வாகன ஆராய்ச்சி மையத்தில் சோதனை செய்து சான்றிதழ் பெற்றுள்ளனர்.

தமிழக அரசு இதன் முக்கியத்துவத்தை பரிசீலனை செய்து வாகன மாற்றம் செய்ய ஒப்புதல் அளித்து அரசாணை வழங்கி உள்ளது. தமிழக அரசின் உத்தரவின்படி, மாற்றுத்திறனாளிகள் அந்தந்த டி.வி.எஸ். இரு சக்கர வாகன விற்பனையாளர்களின் பணிமனைகளை அணுகி, மேற்கூறப்பட்ட இருசக்கர வாகனங்களை சம்பந்தப்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலரை அணுகி மனுச் செய்து, பதிவுச் சான்றில் வாகனமாற்றம் மேற்குறிப்பு பெற்று அதன் அடிப்படையில் பழகுநர் உரிமம் மற்றும் புதிய ஓட்டுநர் உரிமம் பெற்றுக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# படையினரின் உயிரிழப்பு, அங்கவீனத்திற்கு நாட்டின் முன்னாள் தலைவர்களே காரணம்



(கொழும்பு)

நாட்டில் இருந்த முன்னாள் தலைவர்கள் புலிகளுக்கு வழங்கிய ஆயுதங்கள் மூலம் இலங்கைப் படையினர் கொல்லப்பட்டதையும் அங்கவீனர்களாக்கப்பட்டதையும் சிலர் மறந்து போய்விட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். பத்தரமுல்லை, பெலவத்தை டென்சில் கொப்பேக்கடுவ மாவத்தையில் அமைக்கப்பட்டுள்ள அங்கவீனமான படையினரின் உற்பத்திகளை விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை கடந்த 10 ஆம் திகதி திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதனைக் குறிப்பிட்டார்.

1980 ஆம் ஆண்டு முதலாவது படைச் சிப்பாய் சுட்டுக்கொல்லப்பட்ட நாள் முதல் இன்று வரை பெரும் எண்ணிக்கையிலான படையினர் கொல்லப்பட்டுவிட்டனர். பெரும் எண்ணிக்கையான படையினர் அங்கவீனர்களாக்கப்பட்டனர். 1983ஆம் ஆண்டு வடமராட்சிப் போரை முடிவுக்கு கொண்டு வர இடமளித்திருந்தால் பெரும் எண்ணிக்கையில் படையினர் கொல்லப்பட்டிருப்பதையும், அங்கவீனமடைந்ததையும் தடுத்திருக்கலாம். நாட்டின் பொருளாதாரத்திற்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்காது. பயங்கரவாதத்தை ஒழிக்க உதவிகள் கிடைத்த போது நாட்டில் ஆட்சி செய்த சில தலைவர்கள், படையினர் ஊடாகவே ஆயுதங்களைப் புலிகளுக்கு வழங்கினர். புலிகள் அந்த ஆயுதங்களைப் படையினரைச் சுட்டுக்கொல்லப் பயன்படுத்திக் கொண்டனர்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னரும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட பயணத்தைத் தடுத்து நிறுத்த சர்வதேச சக்திகள் மாத்திரமல்ல சில உள்நாட்டு சக்திகளும் முயற்சித்தன. எது எப்படியிருந்த போதிலும் நாம் ஆட்சிக்கு வந்து மக்களின் உதவியுடன் முப்படைகளின் பலத்தின் மூலம் பயங்கரவாதத்திற்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கையை ஆரம்பித்தோம். இதன் போது பாரிய சவால்களை எதிர்கொள்ள நேர்ந்தது. எந்த சக்திகள் வந்தாலும் நாட்டின் பௌத்த தேரர்களும் மக்களும் எம்முடன் இருப்பார்கள் என்பதை அந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் அறிந்துகொண்டோம்.

காட்டிக்கொடுப்புக்களை மேற்கொண்டு இலங்கையை சர்வதேசத்திற்கு மத்தியில் அசௌகரியத்திற்கு உள்ளாக்குவதற்கு மாத்திரமல்ல வேறு குறுகிய நோக்கங்களை நிறைவேற்றி கொள்ள முயற்சிக்கும் டொலர்களுக்கு அடிபணிந்த சிலர் தனியாள் செயற்றிட்டங்களை முன்னெடுத்தனர். அவற்றை நாங்கள் அறிந்திருக்கிறோம். கொல்லப்பட்ட, அங்கவீனமடைந்த படையினரின் விபரங்களைச் சிலர் திரட்டுவதில்லை. வேறு வேறு தகவல்களைத் திரட்டி அவற்றைப் பட்டியலிட்டு விசாரணை நடத்துமாறு சர்வதேசத்திற்கு அனுப்புகின்றனர். யாருக்கு எதிராக இந்த விசாரணைகளை நடத்துகின்றனர். நாம் மனிதாபிமான நடவடிக்கையே மேற்கொண்டோம் அது பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம்.

படையினர் இந்த நாட்டுக்காகவும், இனத்திற்காகவும் நாட்டை அழித்த பயங்கரவாதிகளுக்கு எதிராக மேற்கொண்ட செயற்பாடுகளை மறந்துவிட முடியாது. சிலர் எம்மைச் சர்வதேச போர்க் குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லச் சாட்சியங்களைச் சேகரித்து வருகின்றனர்.

அவர்கள் எதற்காக இந்த முயற்சிகளை மேற்கொள்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளார்.

# சரணடைந்த குடும்பஸ்தரை பாதுகாப்பில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்த குடும்பஸ்தரை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறு யாழ்.நீதிவான் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சங்கானையைச் சேர்ந்த (வயது 32) குடும்பஸ்தர் ஒருவர் உயிர் அச்சுறுத்தல் காரணமாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த திங்கட்கிழமை இரவு சரணடைந்தார். இவரை யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள், பொலிஸாரிடம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை ஒப்படைத்தனர்.

யாழ். நீதிவான் நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் இவர் ஆஜர்படுத்தப்பட்டபோது, விசாரணை நடத்திய யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ.ஆனந்தராஜா, குறித்த நபரை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை நீதிமன்றப் பாதுகாப்புடன் சிறைச்சாலையில் வைக்குமாறும் யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் யாழ். பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# திருட்டுச் சந்தேக நபருக்கு விளக்கமறியல் உத்தரவு

(மன்னார்)

மன்னார் தட்சணா மருத மடுப் பகுதியிலுள்ள வீடொன றிலிருந்து சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பெண்ணொருவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்ற நீதிவான் திருமதி கே.ஜீவராணி கடந்த திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

மன்னார் தட்சணா மருத மடுப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கடந்த டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி களவாடப்பட்டிருந்தன.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் குறித்த வீட்டு உரிமையாளர்கள் மன்னார் பொலிஸில் முறையிட்டபோது, பொலிஸார் சந்தேகத்தின் பேரில் பெண்ணொருவரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியபோது மேற்படி பெண் வழங்கிய தகவலின் படி தங்க நகைகள் சில மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தைப்பொங்கலன்று 'ஆளுமை' படப்பிடிப்பு

(கொக்குவில்)

'ஆளுமை' குறும்படத்தின் படப்பிடிப்பு தைப்பொங்கல் தினமான நாளை 15. - ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு குருநகர் சென்.ஜேம்ஸ் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

தேவாலய பங்குத்தந்தை ஆர். சி. எக்ஸ் நேசராசா அடிகள் படப்பிடிப்பை ஆரம்பித்து வைப்பார்.

குருநகர் நாட்டுக்கூத்துடன் நம் 'குநாம' என்னும் விநியோக முத்திரையுடன் பண்டார வன்னியன் கூத்தைக் குறும்படமாகத் தயாரித்து வருகிறது.

படத்துக்கான பாடல்களை இசை அமைப்பாளர் முரளி கண்ணன் ஒலிப்பதிவு செய்துள்ளார். ஒளிப்பதிவாளர் அன்ரன் படப்பிடிப்புகளை பொறுப்பெடுத்துள்ளார்.

ஜூலை மாதம் 25 ஆம் திகதி குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலய 150 வது ஜூபிலி விழாவைச் சிறப்பிக்கும் விதமாக 'ஆளுமை' குறும்பட இறுவெட்டு வெளியிட்டு வைக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(160)

# இராணுவத்தினரின் ரோந்து இரவு நேரத்தில் அதிகரிப்பு

(யாழ்.நிருபர்)

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரின் இரவு நேர பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. துவிச்சக்கரவண்டிகளிலும் மற்றும் கால்நடையாகவும இராணுவத்தினர் இந்த ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

சில சில இடங்களில் வாகனங்களை மறித்துச் சோதனை நடவடிக்கையிலும் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தினரின் இந்த ரோந்து மற்றும் சோதனை நடவடிக்கைகளால் இரவு நேரங்களில் வீதிகளில் தேவையற்ற விதத்தில் நடமாடுவோர் கூட்டமாக நிற்போரின் நடவடிக்கைகள் குறைநது காணப்படுகின்றது.(18)

# போருக்குப் பின்னரான அபிவிருத்தி அதிகாரிகளுக்கு ஜப்பானில் பயிற்சி

(கிளிநொச்சி)

போருக்குப் பின்னரான அபிவிருத்தி தொடர்பான செயலமர்வும் களப்பயிற்சிக்குமென நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 26 அதிகாரிகள் அரச உத்தியோகத்தர்கள் ஜப்பான் செல்லவுள்ளனர்.


இப் பயிற்சி எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போரின் போது பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்கட்டுமானம் தொடர்பாக பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான நட்புறவும் மீள் கட்டுமானமும் என்ற தொனிப் பொருளில் இப் பயிற்சி நடைபெறவுள்ளதுடன், இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 2 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் என். கௌரிதாஸன், பச்சிலப்பள்ளி பிரதேச செயலர் ரி. முகுந்தன் ஆகியோரே தெரிவுசெய்யப் பட்டவர்களாவர்.

இருநாடுகளின் ஒத்துழைப்புடன் ஜெய்கா நிறுவனம் இந்த பயணத்திற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)



கலாபூஷணம் விருதுபெற்ற (2010) இசையருவி வி.கே.பஞ்சமூர்த்தியின் கௌரவிப்பு விழா கோண்டாவில் வேதபாராயண சன சமூக நிலையத்தில் நடைபெற்றபோது நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் உரையாற்றுவதையும், பஞ்சமூர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (26)

# வெள்ளைக்கொடி வழக்கு விசாரணை; கோத்தபாயவை அழைக்கிறது நீதிமன்றம்



(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது வெள்ளைக் கொடிகளுடன் சரணடைய சென்ற புலிகளின் உறுப்பினர்களை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சுட்டுக் கொல்ல உத்தரவிட்டதாக முப்படைகளின் முன்னாள் தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் குறித்து தொடரப்பட்ட வெள்ளைக் கொடி விவகார வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றது.

இதன்போது சரத் பொன்சேகாவிற்கு எதிரான வெள்ளைக் கொடி விவகார வழக்கில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை எதிர்வரும் 25 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்த வழக்கில் நான்காவது சாட்சியாக அழைக்கப்பட்டுள்ளார்.

இந்த விசாரணைகளின் போது வழக்கில் அடுத்த சாட்சியாக கோத்தபாய ராஜபக்ஷ அழைக்கப்பட வேண்டும் என அரச தரப்பு சட்டத்தரணி நீதிமன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனைப் பரிசீலனை செய்த உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்களைக் கொண்ட குழு பாதுகாப்புச் செயலாளரை நீதிமன்றில் ஆஜராகுமாறு முன்னறிவித்தல் கடிதம் ஒன்றை பிறப்பித்துள்ளது. இதன்படி வெளளைக் கொடி விவகார வழக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி அமைச்சருக்கெதிராக ஐ.தே.க. நம்பிக்கையில்லா பிரேரணை

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை நாடாளுமன்ற செயலாளரிடம் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க நேற்றுக் கையளித்துள்ளார்.

தேர்தலுக்காக அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் கலைக்கப்படும் என நாடாளுமன்றத்தில் அமைச்சர் அதாவுல்லா தெரிவித்துவிட்டு சில உள்ளூராட்சி மன்றங்களை மட்டும் கலைத்தமைக்கு எதிராகவே நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் கரு ஜயசூரிய, செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோன் அமரதுங்க உட்பட ஐக்கிய தேசிய கட்சியின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்

# சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்குவதில் நெருக்கடி

## மனம் குமுறுகிறார்கள் உத்தியோகத்தர்கள்

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டுக்கான சமுர்த்தி கொடுப்பனவுகளை வழங்குவதில் தாம் பெரும் பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளதாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நேற்று கூறினர்.

சமுர்த்தி ஆணையாளர் நாயகம், சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கான கொடுப்பனவுகளை ஜனவரி 11-16 இற்கு இடையில் வழங்க வேண்டுமென சுற்றறிக்கை ஒன்றை விடுத்துள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் நேற்று தெரிவித்தது.

மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் என்பன சமுர்த்தி கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை இன்னும் செய்யாத நிலையில், நாம் எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளோம் என சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்க செயலாளர் சாமற மடுமகலுகே கூறினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 180,000 சமுர்த்தி நன்மை பெறுவோர் உள்ளனர். இப்போது அவர்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்பட்டால் சில நாட்களுக்கு தாக்குப்பிடிக்க முடியும் என மடுமகலுகே கூறினார்.

அநுராதபுரத்தில் சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்கள் 71,153 உள்ளன. இவ்வாறே பொலநறுவையில் 31,720 குடும்பங்களும், பதுளையில் 62, 666 குடும்பங்களும், நுவரெலியாவில் 44,438 குடும்பங்களும், அம்பாறையில் 79,631 குடும்பங்களும் உள்ளன என அவர் கூறினார்.

சமுர்த்திக் கொடுப்பனவுக்கான உரிய ஏற்பாடுகளைச் செய்து தரும்படி உரிய முறையில் சமுர்த்தி திணைக்களத்தை கேட்டுள்ளோம். இதற்கு சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென நம்புகிறோம் என மதுமகலுகே கூறினார்.

# 2011 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி மந்த கதியிலேயே நிகழும்

## எச்சரிக்கிறது உலகவங்கி

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி மந்த கதியிலேயே இடம்பெறும் என உலக வங்கி எதிர்வு கூறியுள்ளது. உலகப் பொருளாதாரம் மிதமான வளர்ச்சி வேகத்தையே இந்த ஆண்டில் பதிவு செய்யும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அபிவிருத்தி அடைந்து வரும நாடுகளான சீனா மற்றும் இந்தியா போன்றன உலகப் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பினைச் செலுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மொத்த உள்நாட்டு உற்பத்தி இந்த ஆண்டில் 3.3 வீதமாக அமையும் எனவும், கடந்த ஆண்டில் சர்வதேச மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.9 ஆகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், இந்த பொருளாதார வளர்ச்சி வேலையில்லாப் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும், சில நாடுகளில் பொருளாதார நெருக்கடி ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் பொருளாதார வளர்ச்சி 8.7 வீதத்தை எட்டும் எனவும், அபிவிருத்தி அடைந்த செல்வந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 2.4 வீதமாக அமையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா, சீனா போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சி உலகப் பொருளாதாரத்திற்கு சாதகமான உள்ளீடுகளை வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில் ஆரம்பிக்கிறது...

வீடுகளையும், பகுதியாக சேதத்திற்குள்ளான வீடுகளையும் கணக்கெடுத்துக்கொண்டது.

முழுமையாக சேதமடைந்த வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கும், பகுதியாக சேதத்திற்குள்ளான வீடுகளை மீள்புனரமைத்துக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அக்குழு தெரிவித்துள்ளது.

வீடுகளை இழந்தவர்களுக்கு கொத்தணி அடிப்படையில் வீடுகளைக் கட்டிக்கொடுக்கவுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு வீடுகளை அமைப்பதற்குரிய பொருத்தமான நிலப் பரப்புகள் தெரிவுசெய்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக கிளிநொச்சி அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (28,77)

## அசாதாரண காலநிலை...

உற்பத்தி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மழை, வெள்ளம் காரணமாக நாட்டில் உள்ள பெரும்பாலான விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் விவசாயிகள் பெரும் இழப்பினைச் சந்தித்துள்ளனர். இந்த இழப்பினால் நாட்டின் மொத்த உணவு உற்பத்தியில் 20 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாகவே இலங்கையில் உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், இலங்கை அடுத்துவரும் ஓரிரு மாதகாலத்தில் உணவுப்பொருட்களுக்கான தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் அபாயம் உள்ளதென பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பாக அலரி மாளிகையில் அவசர அவசரமாக முக்கிய கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையில் ஏற்படும் என எதிர்பார்க்கப்படும் உணவுத்தட்டுப்பார்ட்டை எவ்வாறு எதிர்கொள்வது என ஆலோசனை நடத்தினார். இந்தக் கலந்துரையாடலில், பிரதமர் டி.எம்.ஜயரட்ண மற்றும் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, ராஜித சேனாரட்ண, மஹிந்த சமரவீர, நிமல் சிறிபால டி சில்வா, புஸ்பகுமார, ராஜித சேனாரட்ண உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது திடீர் காலநிலை மாற்றத்தால் உலகளாவிய ரீதியில் ஏற்படவுள்ள உணவுப்பொருட்களுக்கான தட்டுப்பாட்டை சுட்டிக் கட்டிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையில் அடுத்து வரும் இருமாத காலத்துள் ஏற்படவுள்ள் உணவுப்பொருள் தட்டுப்பாட்டை எதிர்கொள்வதற்கு தயாராகுமாறும் அமைச்சர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

## 'லாநினா' அசாதாரண...

நிலைமை சீரடையுமென்றும் குறிப்பிட்டார்.

வட - கிழக்குப் பருவப் பெயர்ச்சி மழை இம்முறை வழமையைவிடக் கூடுதலாகக் கிடைத்துள்ளதைக் குறிப்பிட்ட அவர் சுமார் நூறு வருடங்களுக்குப் பின்னர் இவ்வாறான கூடுதல் மழை வீழ்ச்சி கிட்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைந்த காலகட்டத்தில் இம்முறை 312 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. நாட்டில் மூன்றாவதாகப் பெய்த கூடுதல் மழை இதுவாகும்.

1913 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 342 மில்லி மீற்றர் மழை பெய்தது. 1917 ஆம் ஆண்டு மே மாதம் இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்டதைப் போன்று தற்போது ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்த சமரசிங்க, இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்குத் தொடர்ந்து மழை பெய்யுமென்றும் எதிர்வுகூறினார். காலநிலை என்பது வளிமண்டலம் கடல் மற்றும் பூமி சம்பந்தப்பட்டதுடன் தொடர்புடையதாகும்.

பசுபிக் பிராந்திய கடற்பரப்பில் 1917 ஆம் ஆண்டுக்குப் பின்னர் காலநிலை மாற்றமடைந்து லாநினா காலநிலை தோன்றியுள்ளது. இதனால் உலக நாடுகள் பலதில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

பொதுவாக இந்தக் காலக்கட்டத்தில் காட்டுத்தீ பரவியதாகக் கேள்விப்பட்ட அவுஸ்ரேலியாவிலும் தற்போது கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்தக்கால நிலையை இலங்கையும் எதிர்கொண்டுள்ளது. அதனால் கூடுதல் மழையும் கூடுதல் குளிருடனான காலநிலையும் ஏற்பட்டுள்ளது. பசுபிக் கடலில் ஏற்பட்டுள்ள இந்த லாநினா காலநிலையால் வழமைக்கு மாறான நிலைமை தோன்றியுள்ளது. 200 ஆண்டுகளுக்குப் பின் கிடைக்க வேண்டிய மழை வீழ்ச்சி ஏற்கனவே கிடைக்கப் பெற்றள்ளது.

ஜனவரி மாதத்தில் கிடைக்க வேண்டிய முழு மழை வீழ்ச்சியும் மாதம் முடிவதற்குப் 12 நாட்கள் எஞ்சியிருக்கும் நிலையில் கூடுதலாகவே கிடைத்துள்ளது. 295 மில்லி மீற்றர் மழை 200 ஆண்டுகளுக்குப் பின்னர் கிடைக்க வேண்டும். ஆனால் 92 ஆண்டுகளில் கிடைத்துள்ளது.

உலக வெப்பமயமாதல் பற்றிப் பேசும் நாம் இந்த நிலையை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். நம்மிடம் முறையான நீர் முகாமைத்துவம் இல்லை. அதனால் இந்தளவு பாரிய மழை நீரும் வீணாகிப் போய்விட்டது என அவதான நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## வாகன விபத்தில் ஆறு பேர் பலி!

அவிசாவளையில் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் ஆறு பேர் பலியாகினர்.

அவிசாவளை, கொஸ்கம பகுதியில் இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

வான் ஒன்றும், பயணிகள் பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதனால் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 8 பேர் வரையில் காயமடைந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாகிஸ்தானின்...

இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் தகவல் பரிமாற்றம் உட்பட பிராந்திய பாதுகாப்புடன் தொடர்பான விடயங்களும் இச்சந்திப்பின்போது ஆராயப்படவிருக்கிறது.

## இராணுவ....

விவாதிக்கப்பட்டது.

சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணை செய்யக் கோரி உயர்நீதிமன்றிற்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிணற்றிலிருந்து...

இவர் நேற்று அதிகாலை எழுந்து வீட்டிற்கு வெளியே சென்றபோது தவறி கிணற்றில் வீழ்ந்து இறந்துள்ளதாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டனர். (பா)



பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# ஊடகங்கள் இனவிரோதத்தை வளர்க்கக் கூடாது ஊடக நிறுவனங்களிடம் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்துவதற்கு எவரும் முயற்சி செய்யக் கூடாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடனான சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தை எவரும் விமர்ச்சிக்க முடியும் என்றபோதிலும், நாட்டை விமர்சனம் செய்வதற்கு எவரும் முனையக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையிலான கருத்துக்கள் வெளியிடப்படக் கூடாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இனங்களுக்கு இடையில் குரோதத்தை ஏற்படுத்த சில ஊடகங்கள் முனைப்பு காட்டி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை பிளவுபடுத்த சில ஊடகங்கள் ஆர்வம் காட்டி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் இலக்குகளை எவரேனும் நிறைவேற்ற முயற்சித்தால் அது முறியடிக்கப்படும் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் போன்றே யாழ்ப்பாணத்திலும் சில கடத்தல் மற்றும் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளின் போது இந்தியாவின் ஒத்துழைப்பு வரவேற்கப்படும் அதேவேளை, இலங்கைக்கே உரிய ஓர் தீர்வுத் திட்டமே முன்வைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஏமாற்றப்படும் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் நடக்கும் மோசடி

அவுஸ்திரேலியா உள்ளிட்ட மூன்றாம் நாடு ஒன்றுக்கு தப்பி செல்வதற்காக,தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் அதிக பணம் செலுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அகதி முகாம்களில் இரகசிய முகவர்களும் செயற்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் இதன் ஆபத்துகள் குறித்து தெளிவுப்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸாரும் தொண்டு நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றனர். யுத்த காலத்தின் போது இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாக சென்ற தமிழ் மக்கள், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வசித்து வருகின்றனர்.

எனினும் அவர்கள் கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் சிறந்த வாழ்க்கையை பெறமுடியும் என்ற ஆர்வத்தில் சட்டவிரோதமாக அங்கிருந்து தப்பிச் செல்ல முற்படுவதாக, ஈழ அகதிகள் புனரமைப்பு நிறுவனத்தின் இயக்குனர் எஸ்.சீ.சந்திரஹாசன் தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படுமா?

## தீர்மானம் இல்லையென்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)



உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைப்பது தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொடர்சியாக பெய்து வருகின்ற மழை காரணமாக தேர்தலை ஒத்திவைக்குமாறு எதிர்க் கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார். அலரி மாளிகையில் நேற்றைய தினம் ஊடக பிரதானிகளுடன் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம், இனப்பிரச்சினை தொடர்பில் ஏற்பட்ட காயங்களை மாற்றும் இலக்குடன் செயற்படவிருப்பதாக அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பிலும் தாம் அவதானம் செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

- வெள்ளப்பாதிப்பால் அல்லலுறும் மக்களுக்கு -

# இந்தியாவின் உதவிப் பொருட்கள் இன்று கொழும்பு வந்தடையும்

இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான முதற்கட்ட உதவிப் பொருள்களை இன்று வெள்ளிக்கிழமை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

படுக்கை விரிப்புக்கள், மெத்தை, குடிநீர், உணவுப் பொருள்கள் உள்ளடங்கலாக 25 தொன் உதவிப் பொருள்களை இன்று வெள்ளிக் கிழமை நண்பகல் கொழும்புக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

இரண்டாம் கட்டமாக எதிர்வரும் 17ஆம் திகதி இந்தியா உதவிப் பொருள்களை அனுப்பி வைக்கவுள்ளதுடன், இதில் உடனடியாக உண்ணக்கூடிய வகையிலான உணவுப் பொருள்கள், சீனி, பால்மா, குழந்தைகளுக்கான பால்மா, உப்பு, மருந்துப் பொருள்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

இலங்கை கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இவ் உதவிப் பொருள்கள் இந்தியாவினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் இந்திய பாதுகாப்பு அமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

# நாட்டில் இடம் பெற்ற அழிவு ஒரு குட்டிச் சுனாமியாம்

**அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர**

(கொழும்பு)

தற்போது வெள்ளத்தினால் ஏற்பட்ட பேரழிவு 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரழிவுக்கு அடுத்ததான இரண்டாவது மிகப்பெரிய பேரழிவாகும் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். இந்த வருடத்தின் முதல் 13 நாட்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கம் 138 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளது. எனினும் கடந்த வருடம் முழுவதும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 294 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதற்கு மேலதிகமாக நேற்று வியாழக்கிழமை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 75 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளதாகவும் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இந்திய அரசினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் இன்று வெள்ளிக்கிழமை துறைமுகத்தை வந்தடையவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, சீரற்ற கால நிலை காரணமாக 23 பேர் உயிரிழந்து, 36 பேர் காயமடைந்துள்ளதுடன் எட்டுப்பேர் காணமல் போயுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



# "எல்லாமே சாத்தியம்" நாட்காட்டி தமிழகத்தில் கிளப்பும் புயல்

இந்திய அரசின் இராணுவத்துறை நடத்தும் சைனிக் பள்ளி திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை அமராவதி நகரில் உள்ளது. இந்த பள்ளியில் 2011ஆம் ஆண்டுக்கான நாட்காட்டி பள்ளி மாணவ, மாணவி யர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நாட்காட்டியில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புகைப்படம் அச்சிடப்பட்டுள்ளது. அந்த புகைப்படத்திற்கு தலைப்பாக "எல்லாமே சாத்தியம்" என்று எழுதப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதைக் கண்டித்து பெரியார் திராவிட கழகத்தின் பொதுச்செயலாளர் கு.ராமகிருஷ்ணன் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

ஈழத்தில் தமிழினம் அழிக்கப்பட்டுள்ள சோக நிகழ்வுகளில் இருந்து மீளமுடியாமல் உலகத்தமிழர்கள் உள்ளநிலையில், இவ்வாறானவற்றை தமிழ்நாட்டில் உள்ள பள்ளியில் கொடுத்து தமிழக மாணவர்களின் வீடுகளில் வைக்கச்சொல்லி கொடுப்பது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல் இருக்கிறது என கு.ராமகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியை தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள வைக்க மத்திய அரசு முயல்கிறது. நாட்காட்டியை திரும்பப் பெறவேண்டும். அப்படி இல்லையென்றால் போராட்டம் நடத்துவோம் என்று அவர் தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

– வட, கிழக்கு மாகாணங்களில் இன்னமும் –

# இரண்டாயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பில் நிலக்கண்ணிவெடிகள்

இராணுவப் பொறியியலாளர்களால் மொத்தமாக 307,200 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டும் அழிக்கப்பட்டு முள்ளன. இன்னமும் 1,872 சதுர கிலோமீற்றர் பரப்பளவு நிலத்தில் கண்ணிவெடி அகற்றப்பட்டு வருவதாகவும் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலேயே இந்தக் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கில் அண்மையில் 1,300 படை வீரர்கள் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கையில் உள்ளூர் அமைப்புக்களுடன் இணைந்து பல சர்வதேச அமைப்புக்கள் ஈடுபட்டிருந்தன. ஒட்டுசுட்டான் மற்றும் நெடுங்கேணிப் பகுதிகளில் முற்றாக கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் பரந்தனிலிருந்து முகமாலை வரை, கொக்கா வில், மன்னார் ஆகிய பகுதி களில் தற்போது கண்ணிவெடி கள் அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகியவை உள்ளடங்கலாக வன்னியில் மக்கள் வசிக்கும் பகுதிகளிலும் வீதிகளிலும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.



முகமாலை மற்றும் ஆனையிறவிலிருந்து பரந்தன் வரையான ஏ - 9 வீதியில் இராணுவத்தினர் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளனர். அத்துடன் கொக்காவில், மணத்தீவு, துணுக்காய் ஆகிய பகுதிகளிலும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபடுவரெனவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மக்களுக்கு
ஷாலோம்
SHALOM
SEC
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
SHALOM வழங்கும் நற்செய்தி...!
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்
SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/357)
தொலைபேசி : 0217901798 - 0771044861
தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.